மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 109 பகுதி: 11 நவம்பர்-2015

திருவள்ளுவர் ஆண்டு 2046



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14.09.1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A. | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்க் கல்லூரிக்குழு

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் M.B.A., | உறுப்பினர் |
| முனைவர் க.பாலகிருஷ்ணன் | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

# பொருளடக்கம்

1. நற்றிணை காட்டும் மனித உறவுகளும் மனிதநேயமும் 5
முனைவர் சு.விஜயன்

2. சங்க இலக்கியம் -
காதா சப்தசதி தலைவியின் பண்புநலன்கள் 17
முனைவர் பெ.சுமதி

3. இலக்கியம் காட்டும் நீர்வளம் 28
புலவர் சி.பாண்டுரங்கன், ஆம்பூர்

# இதழ் மணம்

இவ்விதழில் முதலாவதாக அமைந்த ஆய்வுக் கட்டுரை முனைவர் சு.விசயன் அவர்களின் நற்றிணை காட்டும் மனித உறவுகளும் மனித நேயமும் என்பதில் இலக்கியம் என்பது வாழ்க்கை ஊடகம் எனக்கூறி பல்வேறு இலக்கியங்களில் காணப்படும் மனித நேயச் செய்திகளையும் அதனூடே காணப்படும் மனித உறவுகளையும் இன்றைய உலக மயமாக்கல் சூழலில் மனிதத் தீவில் உறவுகளின் தேவையையும் தம் உறவுகளை மறந்து செல்வத்தை நேசிக்கின்ற மனிதர்களையும் அதே போல நற்றிணை வாயிலாக தலைவன், தலைவி, தோழி முதலியோரின் பண்பு நலன்களை (உறவுகளை) விருந்தோம்பல் முதலான நற்செயல்கள் மூலமாகவும் சங்கத்தமிழரின் வாழ்வியலை உறவுநிலைகளை, மனிதநேயச் சிந்தனைகளை நற்றிணைப் பாடல்களின் வழி அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இவ்விதழில் இரண்டாவதாக அமைந்துள்ள கட்டுரை முனைவர் பெ.சுமதி அவர்களால் எழுதப்பட்டுள்ளது. சங்க இலக்கியம் - காதா சப்தசதி தலைவியின் பண்புநலன்கள் என்ற ஆய்வுக் கட்டுரையில் மக்களின் வாழ்க்கையைத் திணை அடிப்படையில் படம்பிடித்துக் காட்டும் சங்க இலக்கியமும் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட காதா சப்தசதியிலும் ஒரு அடிப்படை ஒருமைப்பாடு காணப்படுவதை எடுத்துக் காட்டி உதாரணமாக 'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்' என்ற தொல்காப்பிய அகத்திணை மரபினை வைத்துக் கொண்டு தலைவியின் பண்பு நலன்கள் தலைவியின் ஊடல், பரத்தையர் பிரிவு, வாயல் மறுத்தல் முதலான செய்திகளோடு இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கை பற்றியும் தலைவி தனது கணவனுக்காக தன்னை அர்ப்பணித்து அவனுடைய இன்பமே தனது இன்பம் என எண்ணி வாழும் வாழ்க்கையை குறுந்தொகைப் பாடல்கள் வழியும் காதா சப்தசதி வாயிலாகவும் அழகாகப் படம்பிடித்து ஒரு ஒப்பிலக்கியப் பார்வையில் இந்தக் கட்டுரை அமைந்துள்ளது. இதுபோல ஆய்வாளர்கள் பிற நூல்களை ஒப்பிட்டு ஆராய இக்கட்டுரை ஒரு தூண்டுகோலாக அமையும்.

புலவர் சி.பாண்டுரங்கனின் இலக்கியம் காட்டும் நீர்வளம் என்னும் கட்டுரையில் தொல்காப்பியம் முதலாக சங்க இலக்கியங்களில் கலித்தொகையில் காணப்படும் அருவிநீரைப் பஞ்சத்தை வென்ற அருவி எனவும் அகநானூற்றில் காணப்படும் அருவிநீரை வெள்ளருவி எனவும் புறநானூற்றில் காணப்படும் அருவியை பொங்கருவி நீர் எனக் கூறி பாரதிதாசன் படம்பிடித்துக் காட்டும் அமிழ்து எது? என்பது வரை அருவியின் சிறப்புக்களை நன்கு ஆராய்ந்து ஆய்வுநோக்கில் தொகுத்து வழங்கியுள்ளார். இக்கட்டுரையானது தற்கால ஆய்வாளர்களுக்கு சங்க இலக்கியத்தில் நீர்வளம் பற்றி அறிய உதவும் பாண்டுரங்கனின் முயற்சி பாராட்டுதற்குரியது.

# நற்றிணை காட்டும் மனித உறவுகளும் மனிதநேயமும்

முனைவர் **சு.விஜயன்**, எம்.ஏ., எம்ஃபில், பி.எச்.டி., டிப்.இன்.ஜெர்னலிசம்,
முதல்வர், தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 625 001.

இலக்கியம் மனித வாழ்வின் அற்புதங்களையும் எடுத்துக்காட்டும் ஊடகம் என்றனர் மேலை இலக்கியப் பெருமக்கள். அதன் எதிரிடையாக இலக்கியங்கள் மனித வாழ்வின் எதார்த்தங்களை அல்லது மனிதனுக்குள் இருக்கும் மனிதப் பண்பை, வாழ்வியல் விழுமியங்களை மக்களுக்கு எடுத்துக்காட்டி உணரவைப்பது எனப் பொருள் கொண்டனர் தமிழ் இலக்கிய அறிஞர்கள். அவர்களின் இச்சிந்தனைக்குப் பின்புலமாய் அமைந்தது செவ்வியல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களும் திருக்குறள் போன்ற அறநூல்களும் ஆகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தொடங்கி, 'பிறிதின்நோய் தன்நோய் போல போற்றாக் கடை' என்பதாகத் தொடர்ந்து, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்பதாக தமிழ் இலக்கியப் பரப்பு முழுமையும் இன்றளவும் கூட மனிதநேயச் சிந்தனைகள் விரவிக் காணப்படுகின்றன. அவற்றுள் மனித உறவுகளின் செயற்பாடும் அவற்றின் உள்ளாக வழிந்தோடும் மனித நேயத்தின் சிறப்புக்களையும் இனம் காண்பது தற்காலச் சூழலில் அவசியமான ஒன்றாகும். சங்க இலக்கியப் பனுவல்களுள் ஒன்றான நற்றிணையில் வெளிப்படும் மனித உறவுகளையும், அதன் வழியான மனிதநேயச் சிந்தனைகளையும் எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மனித உறவுகளும் மனிதநேயமும்**

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் தகவல் தொடர்பு சாதனங்களின் வருகை நாடு, மொழி, இனம் கடந்து மக்களை ஒன்றுபடச் செய்துள்ளது என்னும் கருத்து பரவலாகப் பேசப்படுகின்றது. எனினும் இச்சூழலில்தான் மனிதநேயமும், மனித உறவுகளின் மதிப்பும் பெருமளவு குறையத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் தனியொரு தீவாக இருந்து கொள்கிறான். உறவுகளின் தேவையும், மனிதர்களை நேசிப்பதன் அவசியமும் தேவையற்றது எனக்

கருதி அவற்றைப் புறம் தள்ளுகிறான். மனித உறவுகளை மதிப்பதில் இருந்தே மனிதநேயம் என்னும் பண்பு தலையெடுக்கிறது. சகமனிதனுடன் உறவு கொண்டாடும் போது அவனை நேசிக்கத் தொடங்குகிறோம். "மனிதன் மலர்ந்த காலந்தொட்டு மனிதநேயமும் அவனோடு ஒட்டி உறவாடி கவிபாடி மலர்ந்தே வந்துள்ளது. மனிதநேய வேர்களாலே அவன் இருதயம் படைக்கப்பட்டது. மனிதநேயத் துளிகளாலே. இரக்கம் உருவாக்கப்பட்டது. மனிதநேயத்தின் சாட்சிகளாகவே அவன் கண்கள் படைக்கப்பட்டன. ஆனால் நவநாகரிக உலகின் கலியுகத்தின் சூழ்நிலை மனிதநேயம் என்ற பிறவிக்குத்தை மனிதன் இழக்க முற்படுகிறான். தன்னையறியாமல் அழிக்க முற்படுகின்றான். மறக்க, மறைக்க தன்னையே தயார் செய்கிறான். காரணங்கள் பலப்பல. பணம் - மதம் - காமம் - களவு - கயமை - பொறாமை - இனம் - சூது - பகை - கல்லாமை - தீநட்பு எனக் காரணங்கள் பலப்பல. ஆனாலும் மனிதன் இந்த நச்சுக்காற்றை அளவோடே கலந்து சுவாசிக்கிறான். ஏனெனில் மனிதநேய குணம். பிறவி மலராக அவன் நெஞ்சில் மலர்ந்துள்ளதால் மணம் பரப்பிக் கொண்டே வருகிறது" என்னும் கூற்று மனிதநேயம் குறித்த புரிதலை வழங்குகிறது.

**மனித உறவுகளைப் பேணுதலே மனிதநேயமே செல்வம்**

மனிதநேயப் பண்பு என்பது தன் சுற்றத்தாரை விடுத்து பிறரை நேசித்தல் என்பது ஆகாது. தன் பெண்டு, தன் பிள்ளை, தம் உறவினர் ஆகியோரில் இருந்து தொடங்கியே பிறரை நேசிக்கும் மனப்பான்மை உருவாகும். நற்றிணைத் தலைவியின் கூற்றில் தம்மிடம் அடைக்கலமாக வந்தவர்களைத் தம் உறவினரை நேசித்துப் பேணுதல் உலகில் உள்ள செல்வங்களிலெல்லாம் பெரிய செல்வம் என்கிறார். இதனை,

**"அரிகால் மாறிய அம்கண் அகல்வயில்**
**மறுகால் உபத ஈரச்செறுவின்,**
**வித்தொடு சென்ற வட்டி பற்பல**
**மீனொடு பெயரும் யாணர் ஊர**
**நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்!**
**செல்வம் அன்று; தன்செய்வினைப் பயனே;**
**சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்**
**புண்கண் அஞ்சும் பண்பின்**
**மென் கட்செல்வம் என்பதுவே". (நற்.210)**

என்னும் மிளைகிழான் நல்வேட்டனாரின் பாடல் எடுத்துக்காட்டு கின்றது. நெல்லறுத்து நீங்கப்பெற்ற அழகிய இடமகன்ற வயல் அங்கு மீண்டும்

உழுத ஈரமான சேற்றில் விதைக்கும் பொருட்டு விதைகளைக் கடகப் பெட்டியில் இட்டுச்சென்றனர். விதைத்துத் திரும்புகையில் கொண்டு சென்ற கடகப்பெட்டியில் பலப்பல மீன்களை அள்ளிவருகின்ற புதுவருவாயை உடைய ஊரனே, அரசரிடம் மாராயம் அவர் முன்பு விரைந்த செலவினையுடைய தேர், குதிரை, யானை ஆகியவற்றின் மீதூர்தலும் செல்வம் எனக் கருதின. அவை செல்வமாக, அவை யாவும் முன்பு செய்த வினையால் ஏற்படும் பயனேயாம். சான்றோர் பலரும் செல்வம் என்று போற்றுவது எதனை என்று ஆராயின், தம்மை அடைக் கலமாகக் கொண்டு சேர்ந்தவருக்கு நேரும் துன்பத்திற்கு அஞ்சும் பண்பாகும். அவர் துன்பம் நீக்கி அவரைக் கைவிட்டு நீங்கும் வன்கண்மை இன்று இனிய தன்மையனாய் விளங்கச் செய்யும் அந்தப் பண்பே செல்வமாகும் என்கிறாள். திருவள்ளுவர் கூறும்,

**"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்**
**தந்நோய் போற் போற்றாக்கடை."**

என்னும் குறளுக்கு இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். தம் உறவுகளை மறந்து செல்வத்தைச் சேர்ப்பதும், செல்வத்தை நேசிப்பதும் பயனற்றது. மனிதஉறவுகளைப் பேணுதலே உண்மையான செல்வம். அதுவே மனிதநேயத்தின் அடிப்படை என்பதை மேற்கண்ட பாடல் உணர்த்தி நிற்கின்றது.

இதேபோன்று தலைவனின் துன்பத்திற்காகத் தலைவி வருந்துவதும், தலைவியின் நிலையைக் கண்டு புதல்வன் அழுவதும், புதல்வனைக் கண்டு தலைவி ஆறுதல் கொள்வதுமான, உறவுகளின் ஒருங்கிணைப்பை மற்றொரு நற்றிணைப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

**"பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ,**
**நெடுங்கால் கணந்துள்அம் புலம்பு கொள்தெள்விளி**
**சுரம் செல்கோடியர் கதுமென இசைக்கும்**
**நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்**
**கடுங் குரற் பம்பைக் கதநாய் வடுகர்**
**நெடும் பெருங்குன்றம் நீந்தி, நம்வயின்**
**வந்தனர்; வாழி- தோழி! கையதை**
**செம்பொன் கழல்தொடி நோக்கி, மாமகன்**
**கவவுக்கொள் இன்குரல் கேட்டொறும்,**
***அவவுக்கொள் மனத்தேம்ஆகிய நமக்கே" (நற்.212)***

என்னும் குடவாயிற் கீரத்தனார் பாடல் தலைவன் - தலைவி - புதல்வன் ஆகியோரிடையே நிகழும் மனிதஉறவுகளைப் பேணும் மனிதத்

தன்மையை விவரிப்பதாக உள்ளது. 'பார்வை ஒன்றுபட வேடன் வலையை அமைத்தனன். அந்த வலையைக் கண்ட நெடிய காலையுடைய கணந்துள் என்ற பறவை அச்சமுற்றுக் கத்தும். தனித்துக் குரலெழுப்பும் பறவையின் தெளிந்த ஓசை பாலை நில வழியில் செல்லும் கூத்தர் வழிச்செல்லும் வருத்தம் புலப்படாதவாறு திடீரென இசைக்கும் யாழிசையுடன் சேர்ந்து ஒத்து ஒலிக்கும். இத்தகைய வழியில் கடுமையாய் ஒலிக்கும் பம்பையுடன் சினமிகுந்த நாயையுமுடைய வடுகர் கூட்டம் தங்கும் நெடிய பெரிய குன்றம் உள்ளது. அக்குன்றமும் கடந்து நம் தலைவர் வந்தனர். நம் கையில் செம்பொன்னாற் செய்து அணிவிக்கப் பட்ட தொடி இப்பொழுது கழன்று விழும். அதனை நம் சிறந்த புதல்வன் நோக்கி, நம்மை அணைத்துக் கொண்டு அழும் இனிய குரலைக் கேட்குந்தொறும் ஆவலுற்ற மனத்தினராய் இருக்கும் நம்மிடத்துத் தலைவர் வந்து சேர்ந்தனர்" என்பதாகக் குறிப்பிடுகிறாள். தலைவன் பாலை வழியில் வரும் வருத்தத்தை எண்ணி, தலைவி வருந்துகிறாள். அதனால் தலைவியின் உடல் மெலிந்து கைவளைகள் கழன்று விழுகின்றன. அதுகண்ட புதல்வன் தாயைக் கண்டு அழுகிறான். அவனை அணைத்து அவனது அழுகுரலைத் தலைவனின் குரலாய் நினைத்த மகிழ்கின்றாள் தலைவி. இங்கு தலைவன் - தலைவி - புதல்வன் ஆகியோரிடையான உறவுநிலையின் உச்சம் சிறப்பிக்கப்படுகிறது. ஒருவர் துன்பத்திற்காக பிறர் வருந்துதல் என்பது பிறரின் மீது கொண்ட அன்பும் மனிதநேய உணர்வுமே ஆகும். "மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்கவேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை. அந்த மனநிலையினால் தூண்டப்பட்டு நடைபெறும் செயல்நிலை. இந்த மனநிலையையும் அதன் விளைவான பல்வேறு செயல் நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகும் வாழ்க்கை நோக்கம் தான் மணிநெறி. அதாவது வாழ்க்கை மணிநெறி" என்னும் சாலினி இளந்திரையனின் கூற்றிற்கேற்ப மேற்கண்ட நற்றிணைப் பாடலால் மனிதநேய மணி நெறியாக விளங்குகிறது.

**நம்பிக்கையே மனிதநேயம்**

மனித உறவுகள் அனைத்துமே நம்பிக்கையால் பிணைக்கப் பட்டவை. சகமனிதரின் மீது கொண்ட நம்பிக்கை நீங்குமானால் அம்மனிதன் மீது கொண்டுள்ள நட்பும் உறவும் நீங்கும். நம்பிக்கையின் வழி பெறப்படும் உறவானது இறுதிவரைத் தொடரும். 'நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது பிற்கால நீதிப்பாட்டி. கல்வியின் பயன் அறிவும் பண்பும் பெறுதலே என்னும் உண்மையை உணர்ந்து கல்வி கற்றவர்கள்.

அத்தகைய நன்மக்களையே விரும்புவார்கள் என்பது இதன்பொருள். இதேபோலத்தான் வாழ்வின் பலதளங்களில் உயர்சிந்தனைகளைப் பரப்பி வந்துள்ள தமிழர்கள் அதன் ஒரு கட்டத்தில் நம்பிக்கையின் உச்சத்தைப் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளனர்.

**"புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை**
**முலைவாய் உறுக்கும் கைபோல் காந்தட்**
**குலைவாய் தோயும் கொழுமடல் வாழை**
**அம்மடல் பட்ட அருவித் தீம் நீர்**
**செம்முக மந்தி ஆளும் நாட!**
**முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்,**
**நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்;**
**அம்சில் ஓதி என்தோழி தோட்துயில்**
**நெஞ்சின் இன்புறாய் ஆயினும், அதுநீ**
**என் கண் ஓடி அளிமதி -**
**நின்கண் அல்லது பிறிது யாதும் இலளே"** **(நற்.355)**

என்னும் பாடலில் அன்பினால் பிணைக்கப்பட்ட இரண்டு பேர் ஈருடலும் ஒருயிருமாக இணைந்து போனார்கள். அவர்கள் இருவருக்கும் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்ட தனிநிலை என்பது கிடையாது என்று தமிழர்கள் உறுதியாக நம்பினார்கள். இந்த அடிப்படையிலேயே அவர்கள் காதலையும் நட்பையும் கணித்தார்கள். இதன் விளைவாக எழுந்தது தான் இங்கே குறிப்பிடப்பட்ட 'நனிநாகரிகர்' பற்றிய கருத்து.

மேலே எடுத்துக்காட்டிய (முந்தையிலிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் என்னும்) கருத்தைக் கொண்ட நற்றிணைப் பாடலில் ஒருத்தியைக் காதலித்து அவளைத் திருமணம் செய்து கொள்ளாமலே காலம் கடத்தும் ஒரு தலைவனைப் பார்த்து அவளால் காதலிக்கப்பட்ட அவளின் தோழி இப்படிச் சொல்லுகிறாள். அதாவது திருமணத்தை விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லுவது அந்த நினைவே இல்லாமல் வந்து போய்க் கொண்டிருக்கிற உனக்கு நஞ்சு போலக் கொடுமையானதாகத் தோன்றினாலும் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் நாகரிகம் என்று சொல்லுகிறாள் தோழி. இதன்மூலம் ஒரு பெரிய வாழ்க்கை மணிநெறி மக்கட் குலத்துக்கு அள்ளி வழங்கப்பட்டுள்ளது. நட்பினாலோ காதலினாலோ ஈருடலும் ஒருயிருமாகக் கலந்து விட்டவர்கள் தங்கள் தனி உடலுக்குத் துன்பம் வருவது போலத் தோன்றுகிற மற்றவரின் செயலை அல்லது சிந்தனையை

அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் அந்தத் தொடர்புறவுக்கு அழகு என்பது இந்த வாழ்க்கைக் கோட்பாட்டின் திரண்ட கருத்து.

வாழ்க்கையில் கடைப்பிடிக்கத்தக்கதாக எடுத்துச் சொல்லப்படும் மணிநெறி என்பது சாதாரணமானவர்களுக்கு எட்ட முடியாத இலக்காகத் தோன்றுகிறது. ஓரளவு பண்பட்டு அத்தகைய நடைகளில் பழக்கப் பட்டவர்களுக்கு அது எளிதான நடைமுறையாகத் தோன்றுகிறது. காதலியை அடிக்கடி சந்தித்து அளவளாவிச் செல்வது தலைவனுக்கு எளிதாகவும் உவப்பானதாகவும் இருக்கிறது. அந்த எளிய நடைமுறைக்கு மாறாகத் திருமணம் செய்துகொண்டு வாழவேண்டும் என்று தலைவியின் சார்பின் தோழி வற்புறுத்துவது எளிய நடையில் இன்பம் கண்டு பழகிவிட்ட அவனுக்கு மிகவும் கசப்பாக இருக்கிறது. இந்த உணர்வோட்டத்தைப் புரிந்துகொண்டு தான், தோழி இந்த மணிநெறியை அவனுக்கு நினைவூட்டுகிறாள். காதல் என்பதும் நட்பு என்பதும் மிகப்பெரிய வாழ்க்கைச் செய்திகள் அந்த வாழ்க்கையை மேற்கொள்ளு பவர்கள் இன்பத்துக்கு தயாராக இருப்பது போலவே துன்பம் வந்தால் அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கவேண்டும் என்னும் வாழ்க்கை நெறியை தலைவனுக்கும் அதன் மூலம் உலகத்து எல்லோருக்கும் எடுத்து வழங்குகிறாள் தோழி.

நட்பிலும் காதலிலும் தியாகம் என்ற பண்புக்கு முதன்மையான இடம் உண்டு. தியாகம் என்றதும் உயிர்த்தியாகம் போன்ற பெரிய தியாகங்களை நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. சிறிய உணர்வுகளைத் தியாகம் செய்வதும் நட்பில் மிகமிகத் தேவையே. இதைத்தான் 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்று சொல்லுகிறது பழமொழி. 'அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவை போல் உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி உறுவார் உறவு என்னும் பிற்காலப் பாட்டும் வறுமை முதலான துன்பங்கள் வரும்போது தங்கள் இன்பத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறது. நற்றிணைப் பாடலையும் இந்தப் பிற்காலப் பாடலையும் அருகருகே வைத்துப் பார்க்கும் போது முந்திய பாடலில் எடுத்துச் சொல்லப்பட்ட பெரிய வாழ்க்கை நெறியின் கடைப்பிடிப்புக்குப் பிந்திய பாட்டு மக்களைத் தயார் செய்தது என்றே நினைக்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு பிற்காலப்பாட்டு வாழ்வின் எளிய துன்பங்களை எடுத்துச்சொல்லி மக்களை அவைகளுக்குத் தயார் செய்கிறபோது நற்றிணைப் பாட்டு அதன் அரிய உச்சநிலையைச் சுட்டிக் காட்டுகிறது.

இதே கருத்தைக் கண்ணோட்டம் என்னும் பகுதியில் 'பெயக் கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்று எடுத்துரைக்கிறது திருக்குறள். நற்றிணைப் பாடலில் நனிநாகரிகர் என்று வலியுறுத்தப்பட்ட கருத்து இங்கே நயத்தக்க நாகரிகம் என்ற பெயரில் வலியுறுத்தப்படுகிறது.

கண்ணோட்டம் உடையவர்கள். அதாவது தொடர்புடைய மற்றவர் களின் துன்பத்தில் கசிந்து உருகும் மனஇயல்பைப் பெற்றவர்கள். நயத்தக்க நாகரிகம் உடையவர்களாக விளங்குவார்கள் விளங்க வேண்டும் என்பது இந்தப் பாடலின் கருத்து. நற்றிணைப் பாடலைத் தனியே படிப்பதை விட இந்தக் குறட்பாவையும் இணைத்துப் பார்க்கும் போது இந்த மனநெறிக்கு அடிப்படையாக இருப்பது மனிதநேயமே என்பது பளிச்செனப் புலப்பட்டு விடுகிறது. அறிவு, பண்பு முதலான இயல்புகளுக்கு மனிதநேய அடிப்படையிலேயே விளக்கம் கண்டவர்கள் தமிழர்கள் 'அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்றும் 'அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தம் நோய் போல் போற்றாக் கடை' என்னும் அந்தக் கருத்து விளக்கங் களைச் சொற்சிற்பமாகச் செதுக்கி வைத்தது. பின்னால் வந்த திருக்குறள் இந்த அடித்தளத்தில் நின்று கொண்டுதான் 'நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்' என்னும் மணிநெறியைக் கணிக்க வேண்டும்.

அறிவும் பண்பாடும் உள்ள வாழ்க்கை என்பதே அடிப்படையில் தியாக வாழ்க்கைதான் பண்புடைய எந்த மனிதனாலும் மற்றோர் உயிரின் துன்பத்தைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்கமுடியாது. தன்னுடைய இன்பங்களையும் இன்னுயிரையும் பணயம் வைத்துக்கூட அந்தத் துன்பத்தை அகற்றிடவே அவன் எழுந்து பாய்வான். அதேபோல அறிவு உடைய ஒருவனாலும் பிற உயிரின் துன்பத்தைக் கண்டு கொண்டே உயிர் சுமந்து உவகையோடு திரியமுடியாது. இந்த அடிப்படையில் நின்றுகொண்டுதான் இரண்டு பேருக்கு இடையிலே உள்ள நட்பையும் காதலையும் மதிப்பீடு செய்கிறது நற்றிணை. அப்படி மதிப்பிடு செய்யும் போது அறிவும் பண்பும் உடையவர்களாக வளர்ந்திருப்பவர்கள் தங்கள் காதலரின் அல்லது நண்பரின் துன்பத்தைத் துடைப்பதற்காக நஞ்சை உண்டு தங்களை இழந்து போகவும் ஆயத்தமாக இருப்பார்கள் என்பது மிக இயல்பான உண்மையாகக் கிடைக்கிறது.

தன் நாடு முழுவதையும் இரவலர்களுக்குக் கொடுத்துவிட்ட பாரியையும் புலவனின் வறுமையையும் நீக்கத்தன் தலையையே கொடுக்க முன்வந்த குமணனையும் மக்களின் பசித்துன்பத்தை நீக்கிய சிறுகுடி கிழான் பண்ணனுக்குத் தன் வாழ்நாளையே கொடுக்க முன்வந்த

கிள்ளிவளவனையும் சங்க இலக்கியத்திலே சந்தித்திருக்கிற நமக்கு அவர்களின் வழிக்கன்றாக வளர்ந்திடக் கூடிய நனிநாகரிகரைப் பற்றிய இந்தக் கருத்து வியப்பான ஒன்றாகத் தோன்ற நியாயமில்லை. சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனி மணிநெறிகளை வகுத்தும் கடைபிடித்தும் வந்துள்ள சங்க காலத் தமிழர்கள் மனிதநேயத்தின் ஒரு கொடுமுடியாக "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" என்னும் மணி நெறியையும் வகுத்து வழங்கியுள்ளார்கள் என்பதே உண்மை.

**சிறந்த இல்லறமே மனிதநேயம்**

இல்லறமே நல்லறம் என்று அந்த வாழ்க்கை அறத்தை ஏற்றுக் கொண்ட இரண்டு பேரும் ஒருவர்பால் மற்றவர் குன்றாத அன்பும் ஈடுபாடு உடையவர்களாக விளங்க வேண்டும். எந்த நிலையிலும் ஒருவர்க்கு ஒருவர் உறுதுணையாக நிற்க வேண்டும் சிறந்த மனைவி எந்த நிலையிலும் தன் கணவனின் பெருமைக்கு ஒவ்வாத செயல்களை நிகழ்த்தவே கூடாது. அதேபோல ஒவ்வொரு கணவனும் தன் மனைவி தன்னில் ஒருபகுதி என்னும் காதல் உண்மையை உணர்ந்து எந்த நிலையிலும் அவளுக்குத் துணை செய்பவனாக விளங்கவேண்டும். ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை என்பதை எந்தக் கணவன் மனைவியரின் குறிக்கோளாகவும் விளங்கவேண்டும். இந்த மணிநெறியைக் கருத்துவகையால் எடுத்துணர்த்திய சங்க இலக்கியம் நேரிடை நிகழ்ச்சி வகையாலும் உள்ளுறை உவமம் என்னும் பொருட்குறிப்பு வகையாலும் எடுத்து உணர்த்துகிறது.

செல்வக்குடியில் பிறந்த ஒருபெண் தங்களை விட வறிய நிலையில் உள்ள ஒருவனை விரும்பி மணந்து கொண்டாள். அவளுடைய பெற்றோர் அந்தத் திருமணத்தை ஏற்கவில்லை. நாளடைவில் அவளுடைய கணவன் மேலும் வறுமைக்கு உள்ளானான். தன் மகள் பசியும் பட்டினியுமாக வாழுவதைக் கேள்விப்பட்ட அவள் தந்தை அவளுக்குப் போதிய உணவுப் பொருளை அனுப்பி வைத்தான் அந்தப் பெண். தந்தையின் வளத்தை உண்டு பசிதீர்வதை விடத் தன் கணவனின் வறுமையைப் பகிர்ந்து கொண்டு பசித்துக் கிடப்பதே மேல் என்று முடிவு செய்து அவ்வாறே வாழ்ந்தாள். நேற்று வரை ஒரு வீட்டின் சிறுமியாக இருந்தவள் இன்று கணவனுக்காக வாழும் தியாக உள்ளத்தை எப்படிப் பெற்றாளோ என்று ஒரு புலவர் வியப்படைவதாக பின்வரும் நற்றிணைப் பாடல் அமைகின்றது.

"பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்தி,
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்,
'உண்' என்று ஓக்குடி பிழைப்ப தெண்நீர்
முத்து அரிப்பொற்சிலம்பு ஒலிப்பத் தந்துற்று,
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந்து ஒழிய, பந்தர் ஓடி,
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென,
கொடுத்த தந்தை கொழுஞ் சோறுஉள்ளாள்,
ஒழுகுநீர் நுணங்கு அறல்போல,
பொழுது மறுத்து உண்ணும் சிறுமதுகையளே" (நற்.110)

என்னும் போதனாரின் பாடல் 'மெல்லிய நரைத்த கூந்தலையுடைய செவ்விய முதுமையுடைய செவிலியர் தேன் கலந்தாலொத்த நல்ல சுவை யுடைய இனிய வெண்ணிறப் பாலுணவை விரிந்த ஒளிபரப்பும் பொற் கலத்தில் இட்டனர். அவர்கள் அங்ஙனம் கலந்திட்ட உணவை ஒரு கையில் 'ஏந்தி புடைப்பாகச் சுற்றிய பூவொத்த மெல்லிய நுனியை உடைய சிறுகோலை ஓங்கி 'நீ உண்க' என்று அடித்தனர். தெளிந்த நீரின் முகிழ்ந்த முத்துக்கள் உள்ளே பரலாக இடப்பட்ட பொற்சிலம்பு ஒலிக்கு மாறு தாவியோடும் தன்மையினள் என்மகள். அவள் செவிலியர் பின் தொடர இயலாது நடை மெலியத் தன் முன்றிலின் கண்ணுள்ள பந்தலின் கீழ் நின்று உண்ணேன் என்று மறுக்கும் சிறிய விளையாட்டுப் பருவத்தினள். அத்தன்மையினள் அறிவும் ஒழுக்கமும் எப்படி உணர்ந்தளன்? தான் மணந்த கொழுநன் குடி வறுமையுற்ற சூழலிலும் தன்னைப் பெற்ற தந்தையின் வளமான உணவினைக் கருதாதவளானாள் நுண்ணிய மணலின் கண் இடையீடு பட்டு வரும் ஒரு பொழுதன்றி ஒரு பொழுதில் உண்ணும் சிறுவன்மையள் ஆனாள். இது வியப்பன்றோ? என்பதன் வழி தலைவி இல்லறத்தை நல்லறமாகப் பேணுதல் வேண்டும் என்ற கடப்பாடு உடையவளாகத் திகழ்கின்றாள். தன்னைப் பேணுதலும், தன் சுற்றத்தைப் பேணுதலும் அதன்வழி சமூகத்திற்குப் பணிசெய்தலுமே மனிதநேயத்தின் அடிப்படைக் கூறாகும். அதன் வெளிப்பாடாகவே நற்றிணைத் தலைவி திகழ்கின்றாள் என்றால் அஃது மிகையாகாது.

**விருந்தோம்பல் பண்பு**

மனிதநேயக் கூறுகளுள் மற்றுமொரு பண்பு விருந்தோம்பல் ஆகும். விருந்து அயர்தல் இல்லறத்தார் கடமையாக அக்காலத்தில் போற்றப்பட்டது. மனிதகுலத்து மற்றவர்களைப் போலவே நமது தமிழரும் பொருட்செல்வத்தின் பெருமையை நன்கு அறிந்திருந்தார்கள். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லவே இல்லை என்று அடித்துச் சொன்னவர்கள் தமிழர்கள். பொருளல்லவரை பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை. பொருள் என்று விளக்கமும் சொல்லி வைத்திருக்கிறார்கள். இதனாலேயே ஓர் இளம்பெண்ணை விரும்புகிற ஓர் இளைஞன் தன்னுடைய மணவாழ்வைத் தொடங்கும் முன்பே தங்கள் குடும்ப வாழ்வைச் சீராகத் தொடங்குவதற்குரிய பொருளைத் தேடிக் கொள்ள வேண்டு என்பதை வாழ்விலக்கணத்தின் ஒருகூறாகவே தமிழர்கள் அமைத்திருக்கிறார்கள். தமிழ் இலக்கணத்தில் உள்ள 'வரை விடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்' என்னும் துறை இதனை அழகாக வலியுறுத்துகிறது.

திருமணத்திற்கு முன்பு அவர்கள் இருவரின் இன்ப வாழ்வுக்கு அடித்தளமான பொருளைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திய இலக்கணம் திருமணத்திற்குப் பிறகும் தலைவன் பொருள் தேடிச்செல்ல வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது. திருமணத்துக்கு முன்பு பொருள்வேண்டும் என்று கூறிய இலக்கணம் மண வாழ்க்கையில் பின்னர் உன்னோடு இல்லறம் வழுவாது நடத்த அன்றோ' என்று தோழி எடுத்துரைக்கிறாள்.

தலைவி சமைக்கவும் இனிதுண்டு உடனிருத்தலைத் தலைவன் விரும்பினும் அருளியோர்க்களிக்கவும், பேணாரைத் தெறவும் புரிவமர் புணர்ச்சியின் பொருட்டும் பொருள் வேண்டுமென்று கருதியே தலைவன் பிரிந்தனன் என்றாள். இவ்வாறு விருந்தோம்பும் பண்பிற்காக, சுற்றத்தினரைப் பேணுதற்காக தலைவன் பொருள்வயின் பிரிதல் அவசிய மாகின்றது என்னும் கருத்து இங்கு புலப்படுத்தப்படுகின்றது. மேற்கண்ட பாடலில் பொருட்செல்வத்தின் இன்றியமையாமை உணர்த்தப்படுகிறது என்பதை விட பொருளைத் தேடிக்கொள்வதற்குப் புதுமையானதொரு நோக்கமும் கற்பிக்கப்படுகிறது என்பதே முக்கியம். அந்த நோக்கம் ஒரு பெரிய மனிதநேய அடிப்படையைப் பெற்று 'செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்போம் எனினே தப்புந பலவே' என்னும் உறுதிக்கோட்பாட்டில் முடிகிறது. இங்கே செல்வம் என்று குறிக்கப்படுவது ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்கு மேற்பட்ட செல்வம். அந்தச் செல்வம் நண்பர்களைப் பெருக்கிக் கொள்ளவும் உற்றார் உறவினரின்

துன்பத்தைத் துடைக்கவும் பயன்படவேண்டும் என்று தமிழர்கள் கருதினார்கள். இந்தப் பொருள் வலியுறுத்தவே பொருள் தேடப் புறப்படும் கணவன்,

**"பிறர்க்கு என முயலும் பேர்அருள் நெஞ்சமொடு**
**காமர்பொருட் பிணிப் போகிய**
**நாம்வெங் காதலர்"** **(நற்.186)**

என்று அவனுடைய மனைவியாலேயே மகிழ்ச்சியோடு குறிப்பிடப் படுவது தனித்த கவனத்துக்கு உரியது. உலகம் நிலைபெற்று இருப்பதற்குக் காரணமாகிய சான்றோர்களையே இலக்கியங்கள் பிறர்க் கென முயல்வோர் என்று குறிப்பிடுவது வழக்கம். இங்கே ஒரு குடும்பத்தின் தலைவன் அப்படிக் குறிக்கப்படுகிறான். அதாவது எந்த ஒரு மனிதனும் பொருளைத் தேடலாம். அதைக்கொண்டு பெரிய இலக்குகளை நோக்கித் தன் வாழ்வை பொருளைத் தேடிக்கொள்ள வேண்டியதற்கு உரிய காரணத்தையும் விரிவாகவே விளக்குகிறது. இதன் அடிப்படையிலேயே பின்வரும் நற்றிணைப் பாடல் அமைகின்றது.

**"பைங்கண் யானைப் பருஉத்தாள் உதைத்த**
**வெண்புறக் களரி விடுநீறு ஆடி,**
**சுரன்முதல் வருந்திய வருத்தம பைபயப்**
**பாஅர்? மலிசிறு கூவலின் தணியும்**
**நெடுஞ்சேண் சென்று வருந்துவர்மாதோ -**
**எல்விவந்த நல்இசை விருந்திற்கு,**
**கிளர் இழைஅரிவை! நெய்துழந்த அட்ட**
**விளர் ஊன் அம்புகை எறிந்த நெற்றி,**
**சிறு நுண் பல்வியர் பொறித்த**
**குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே"** **(நற்.41)**

என்னும் இளந்தேவனாரின் பாடல் பொருள்வயின் பிரிதலின் அவசியத்தைத் தலைவிக்கு எடுத்துக் கூறுவதாய் அமைகின்றது. 'பொலிவுடைய அணிகலன்களை அணிந்த அரிவையே இரவில் வந்த நல்ல புகழை உடைய விருந்தினர் உண்பதற்கு என நீ நெய்யை அளாவ விட்டுக் கொழுவிய ஊனைச் சமைத்ததனால் உண்டான புகை படிந்த நெற்றியில் சிறிய நுண்ணிய பலவாகிய வியர்வைத் துளிகள் தோன்றப் பெற்ற குறுகிய நடையோடு சென்ற உன் புணர்ச்சியைத் தலைவர் அக்காலத்து விரும்பினவர் ஆவர். அத்தகையவர் பசிய கண்களையுடைய யானை தன் பருத்த காலால் உதைத்தலால் பொடிபட்ட வெளிய மேலிடத்தைக் கொண்ட பாழ்நிலைத்திலுள்ள சிறுபுழுதி மூழ்கப்பெற்ற

சுரத்தின் கண் செல்வர். அப்போதுண்டான வருத்தத்தைத் தணிக்க மெல்ல நடந்து பாறைகள் மிகுதியாக உள்ள சிறிய கிணற்றிற் சென்று தணித்துக் கொள்வர். இவ்வாறு அவர் நெடுந்தொலைவு சென்று வருந்துவர். அவ்வாறு வருந்துவதெல்லாம் நடத்தலாம் என்று இலக்கியம் குறிப்பிடுகிறது. பொருளின் இன்றியமையாமையை எடுத்து உணர்த்தும் தமிழ் இலக்கியம் பொருள்தேடும் நெறியை வாழ்க்கை நெறிகளில் ஒன்றாக வலியுறுத்துகிறது. உற்றார் உறவினரையும் பொருட்செல்வம் இல்லாததால் வாடிமெலியும் மற்றவர்களையும் தாங்கி நலம் செய்வதற் காகவே குடும்பத் தலைவன் பொருள்தேடி வரவேண்டும் என்பதைத் தனித்து எடுத்து வலியுறுத்துகிறது.

**முடிவுரை**

மனித உறவுகளின் பால் செலுத்தும் அன்பே மனிதநேயம். அதன் அடிப்படைக் கூறாக, அன்பு, நட்பு, காதல், நம்பிக்கை, சுற்றம் பேணுதல் முதலானவை அமைகின்றன. தன்மீதும் தன்னைச் சார்ந்தவர்களின் மீதும் தனிமனிதன் கொள்ளும் உயர்ந்த உணர்வுகள் அனைத்துமே மனிதநேயச் சிந்தனை கொண்டவையே என்பதை நற்றிணைப் பாடல்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

சங்ககாலத் தமிழர்கள் வாழ்வின் இன்பத்தையும் துன்பத்தையும் அதன் ஏற்ற இறக்கத்தையும் நன்றாக உணர்ந்தவர்கள். பலவிதமான மன ஓட்டங்கள் கொண்ட மனிதர்களை ஒருசமுதாயமாக இணைத்து வைக்க வேண்டுமென்றால் மனிதநேயம் என்ற மெல்லிய கயிற்றால்தான் அத்தனை பேரையும் ஒருங்கிணைக்க முடியும் என்று அவர்கள் கண்டறிந் தார்கள். இல்லறம் சரியாக நடைபெற்றால் சமுதாய வாழ்வுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்பது அவர்களுடைய வயிரம் பாய்ந்த எண்ணம். மனிதநேய உணர்வில் விளைவால் அவைகளின் அரவணைப்பில் சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை பெரும்பாலும் சரியாக நடந்து வந்தது என்பதே வரலாறு. அதனை நற்றிணைப் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

# சங்க இலக்கியம் - காதா சப்தசதி தலைவியின் பண்புநலன்கள்

முனைவர் பெ.சுமதி
உதவிப்பேராசிரியர்
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

**முன்னுரை**

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியம் நம்முடைய அகப்புற வாழ்க்கையை உலக அளவில் எடுத்தியம்பும் பேறுபெற்ற இலக்கியமாகும். திணை அடிப்படையில் மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிக்கின்ற பெருமைக்குரிய இலக்கியம் சங்க இலக்கியம் மட்டுமே என்று கூறப்படுகின்றது. அகப்புற வாழ்க்கையைப் பற்றி பிற மொழி இலக்கியங்கள் எடுத்துரைத்தாலும் ஐந்திணை அடிப்படையில் எடுத்துரைப்பதில்லை.

சங்க இலக்கிய காலகட்டத்தைச் சார்ந்த பிராகிருத மொழி இலக்கியமாகிய காதா சப்த சதியும் அகப்புற வாழ்க்கை எடுத்துரைக் கின்றது. இது சாதவாஹன் மன்னனால் எழுதப்பட்டும் தொகுக்கப்பட்டது ஆகும். சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார் என்ற தொல்காப்பியக் கூற்றின் அடிப்படையில் சங்க இலக்கியத்தில் கூறுவதைப் போன்று காதாவிலும் தலைவன் தலைவி என்ற பொதுப் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற திணைப்பாகுபாடு சங்க இலக்கியத்தில் இருப்பதைப் போல காதாவில் திணைப் பாகுபாடு என்பது இல்லை. ஆனாலும் தமிழ்ச் சங்க இலக்கியங் களுடன் இணை கூறத்தக்க ஒரே ஒரு பிறமொழி இலக்கியம் இஃதொன்றே எனலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். (மு.கு.ஜகந்நாத ராஜா 1981:9) அந்த வகையில் அமைந்த குறுந்தொகைத் தலைவி காதாசப்த சதி தலைவியின் பண்புநலன் ஒப்பிடப்படுகின்றது.

**தலைவிக்கான பண்புநலன்**

சங்க இலக்கிய காலத்தில் பெண்கள் ஆண்களையே சார்ந்து வாழும் நிலை காணப்பட்டது என்பதற்கு ஆண்கள் எத்தவறு செய்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. இரு இலக்கியங் களிலும் பெண்கள், தலைவன் பரத்தையற் பிரிவு மேற்கொண்டு திரும்பி வரும் நிலையில் தலைவனை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனநிலை உள்ளவர்களாகவே காணப்படுகின்றார்கள். இது ஆண்களைப் பொறுத்த

மட்டில் பெருமைக்குரிய செயல். ஆனால் பெண் என்ற நிலையில் அவளை ஒரு மனுஷியாக ஆண் சமூகம் பார்க்கவில்லை என்பதை குறுந்தொகையும் காதா சப்தசதியும் எடுத்தியம்புகின்றன. பெண்களுக் கான பண்புகளை இவ்விரு இலக்கியங்களும் வரையறை செய்கின்றன.

**"வினையே ஆடவர்க் குயிரே, வாள்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு அவ்வாடவர் உயிர்" (குறுந்.135)**

எனப் பெண்ணுக்கு ஆடவனே உலகம் என்று குறுந்தொகை பெண்ணுக்கான பண்பை வரையறை செய்கின்றது.

இக்குறுந்தொகைப் பாடலைப் போன்றே காதா சப்தசதியும் பெண் என்பவள் எவ்வாறு வாழ்க்கை நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றது.

**"முகமதியத்தை முழுதும் திருப்பி**
**ஏனழு கின்றாய்? இளம்வெள் ளரிக்கொடிக்**
**கொழுந்து போன்ற குடில முடைத்தே**
**காதல் வழியும்! காரிகை! கவலேல்!" (காதா.110)**

என்று தோழி, தலைவிக்கு அறிவுரை கூறுகின்றாள். தலைவன் பரத்தையிடம் சென்று திரும்புவது அவனது இயல்பு, அதை ஏற்றுக் கொள்ள வேண்டியது தலைவியின் சிறந்த கற்புடைய தன்மையை வெளிப்படுத்தும். அவ்வாறு இல்லை என்றால் தலைவன் மற்றொரு பரத்தையை தேடிச் செல்வான் என்று தலைவனின் நேர்மையற்ற பண்பு வெள்ளரிக் கொடிக்கு உவமை கூறப்படுகின்றது. பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் அவர்களின் தவறுகளுக்கு துணை போக வேண்டும் என்ற கட்டாய நிலை நிலவியதையும் இரு இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

***தலைவியின் ஊடல்***

தலைவியின் ஊடல் பற்றிக் கூறும் பொழுது குறுந்தொகையில் தலைவி, தலைவனின் தூதினை ஏற்றுக் கொள்ளுதலை உவமை மூலம் கூறுகின்றார்.

**"புல்வீழ் இற்றிக் கல் இவர் வெள்வேர்**
**வரைஇழி அருவியின் தோன்றும் நாடன்**
**தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்**
**வந்தன்று வாழி, தோழி! நாமும்**
**நெய்பெய் தீயின் எதிர் கொண்டு,**
**தான் மணந்தனையம் என விடுகம் தூதே" (குறுந்.106)**

பரத்தையர் பிரிவு மேற்கொண்ட தலைவன் பாணனைத் தூது அனுப்புகிறான். அதற்குத் தலைவி தீயில் ஊற்றப்படும் நெய்யைத்

பணிவிடை செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட பெண்களையே குறுந்தொகையிலும் காதா சப்தசதியிலும் படைத்துக் காட்டியிருப்பதை அறிய முடிகின்றது.

**குடும்பப் பெருமையைப் பாதுகாக்கும் பெண்**

பரத்தை பிரிவு மேற்கொண்டு மீண்டும் தலைவியை தேடி வரும் தலைவனுக்கு தோழி வாயில் மறுக்கின்றாள்.

**"யாய் ஆகியளே விழவு முதலாட்டி**
**பயறு போல் இணர பைந்தாது படீஇயர்**
**உழவர் வாங்கிய கமழம்பூ மென்சினைக்**
**காஞ்சி ஊரன் கொடுமை**
**கரத்தனள் ஆகலின் நாணிய வருமே"** (குறுந்.10)

தலைவன் போற்றத்தக்க தலைவி தாயாகியிருக்கின்றாள். அந்நிலையிலும் தலைவன் பரத்தையிடம் சென்று திரும்புகின்றான். காஞ்சி மரங்கள் பூத்து குலுங்கும் மருத நிலத்து தலைவன் பரத்தையர் இல்லத்திலிருந்து திரும்பியதற்கான குறியோடு தன் இல்லத்திற்கு வருகின்றான். இதை அறிந்த தலைவி தலைவன் தவற்றை மற்றவர் அறியாமல் மறைத்து தலைவன் நாணும்படி தலைவனை ஏற்றுக் கொள்கிறாள் என்று தோழி தலைவியின் செயலை குறிப்பிடுகிறாள். தலைவன் தவறை மற்றவர் களுக்கு தெரியப்படுத்தாமல் குடும்பப் பெருமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தலைவன் தவறை மறைக்கும் தலைவியின் பெருந்தன்மையான குணம் இப்பாடலில் பதிவு செய்யப்படுகிறது.

காதா சப்தசதியில் கவிக்கூற்றாக ஒரு பெண்ணின் மனநிலை வெளிப்படுகிறது.

**"கோதுறும் உளமுடைக் கொழுந்தன் இயல்பைக்**
**குடும்ப வாழ்க்கை குறைபடக் கஞ்சி**
**கோல மேனி சால மெலியவும்**
**கொண்க னிடமும் கூறிட மாட்டாள்"** (காதா.159)

புதுமணப் பெண்ணாகிய தலைவியைக் கொழுந்தன் ஒரு விதமாகப் பார்க்கின்றான். அவனுடைய களங்கமுடைய பார்வையைத் தலைவி வெறுக்கின்றாள். ஆனால் குடும்ப ஒற்றுமை குலையக் கூடாதே என்று அஞ்சித் தலைவனிடம் கூறாமல் தன் மனதுக்குள்ளேயே அடைத்துக் கொள்கிறாள். என்ன செய்வது என்ற கவலையே அவள் மெலியவும் காரணமாக அமைகின்றது.

இப்பாடலில் குடும்பப் பெருமையை பாதுகாக்க பெண்கள் தங்களைத் தாங்களே வருத்திக்கொள்ளும் மனநிலையை அறிய முடிகின்றது. கொழுந்தன் செய்கின்ற தவறுகளை தன் குடும்பத்தில்

தீயானது மேலெழுந்து ஏற்றுக் கொள்வது போல நாமும் அத்தூதினை ஏற்றுக் கொள்வோம் என தோழிக்குக் கூறுகின்றாள்.

இதைப் போன்றே காதாசப்த சதி தலைவனும்; தன் தலைவியை அவன் விரும்புகின்ற பெண்ணின் பெயரைச் சொல்லி அழைக்கின்றான். அதற்குத் தலைவி,

**"அவள் பெயர் கொண்டெனை அழைத்திடட்டும்**
**அவரிடம் தவறென யாதும் கூறேல்**
**எங்காகினும் தம் இதய மொன்றி**
**இன்புற்றாலே எமக்குப் போதும்"** (காதா.231)

என்று கூறுகின்றாள். தலைவன் எங்கோ ஓர் இடத்தில் மகிழ்ச்சியாக இருந்தால் போதும் என்று நினைக்கின்ற காதாவின் தலைவி குறுந் தொகைத் தலைவியின் செயலுடன் ஒத்துப் போவதை அறிய முடிகின்றது.

பரத்தைப் பிரிவு மேற்கொண்ட தலைவன் தலைவிக்குத் தூது அனுப்புகின்றான். அதைத் தலைவி ஏற்றுக் கொள்கிறாள். அதைப் போன்றே காதாவிலும் தலைவியின் முன்னே தலைவன் தான் விரும்பும் வேறொரு பெண்ணின் பெயரைச் சொல்லி அழைக்கின்றான். இதைத் தலைவி ஏற்றுக் கொள்கிறாள். தலைவன் பரத்தை மாட்டுப் பிரிந்தாலும் இன்னொரு பெண்ணை நினைத்துக் கொண்டு இருந்தாலும் அதைத் தலைவி பொறுத்துக் கொண்டு தலைவனோடு வாழ வேண்டிய மனநிலையில் இருந்ததாக குறுந்தொகைத் தலைவியும், காதா தலைவி யும் காணப்படுகின்றார்கள். இருவருடைய மனநிலையும் ஆண்களின் தவறை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே காணப்படுகிறது.

**"நல்நலம் தொலைய நலம் மிகச் சாஅய்**
**இன் உயிர் கழியினும் உரையல் அவர் நமக்கு,**
**அன்னையும் அத்தனும் அல்லரோ?**
**புலவி அஃது எவனோ, அன்பிலங்கடையே"** (குறுந்.93)

அன்பு இல்லாத இடத்தில் ஊடல் கொள்வதால் விளையும் பயன் யாது? என்று குறுந்தொகைத் தலைவி வாயில் மறுத்துரைக்கின்றாள். இதைப் போன்றே காதா சப்த சதியிலும்,

**"சினந்தவர் நங்காய்!" "சினந்ததும் யாரோ!"**
**"பொன்கொடி நீதான்" "பிறர்மேல் சினமேன்"**
**"பிறர் இங் கியாரோ?" "இறைவன் நீதான்"**
**எவ்வித மாமோ" என் விதிப் பயனே"** (காதா. 481)

என்பால் அன்பில்லாதவர் அன்னியர் தானே என்று கூறுகின்றாள் தலைவி. இவ்வாறு இரண்டு இலக்கியத் தலைவிகளும் ஊடல் கொள்ளும் போது தலைவன் மேல் சினந்து அன்னியன் என்று கூறும் ஒற்றுமைப் பண்பை அறிய முடிகிறது. ஊடல் நிகழ்ச்சியில் இரு தலைவிகளுக்கும்

வெளிப்படுத்துகின்றாள். குறுந்தொகைத் தலைவிக்கும் காதா சப்த சதி தலைவிக்கும் இடையே உள்ள உணர்வுகள் வேறுபட்டாலும் அந்த உணர்வுகளின் வெளிப்பாட்டின் மையம் இம்மை மறுமை பற்றிய நம்பிக்கை அடிப்படையிலான ஒற்றுமைக் கூறுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**கணவனுக்காக அர்ப்பணித்தல்**

பெண்ணுக்கு குடும்பம் மட்டுமே உலகம் என்று வாழ்ந்த நிலையை இரு இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. கணவன் தன்னைப் பாராட்ட வேண்டும் என்பதற்காக குறுந்தொகையில் புதுமணத் தலைவி உணவு சமைக்கும் பொழுது பல இன்னல்களை அனுபவிக்கின்றாள்

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஅக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" (குறுந்.167)**

புதுமணப் பெண் கணவனுக்காக உணவு சமைக்கும் பொழுது சமைக்கத் தெரியாமல் துன்பப்பட்டு சமைத்த உணவை கணவன் சுவையாக இருப்பதாக கூறி உண்கிறான். இதைப் பார்த்து தலைவி மகிழ்ச்சியடைகிறாள். இதைப் போன்றே காதா சப்தசதியிலும்,

**"அடுக்கபை; பணியால் அழுக்கடைந் திட்ட**
**மைபடிக் கையால் தைவந் திடலால்**
**மடந்தை முகந்தான் மறுமவர் மதியென**
**கிடந்தது கண்டே கேள்வன் மகிழ்ந்தான்" (காதா. 112)**

புது மணப் பெண் அடுக்களையில் தன் கணவனுக்காக அவன் விரும்பிய உணவை சமைத்து பறிமாறுகின்றாள். அந்தப் பெண் உணவு சமைக்கும் பொழுது அவள் கையில் அடுக்களை மை படிந்துவிடுகின்றது. இது அவளுடைய முகத்திலும் தெரியாமல் பட்டுவிடுகின்றது. மை பட்டு விட்டதால் தன் முக அழகு கெட்டு விடுமோ என்று அச்சம் கொள்கின்றாள். ஆனால் அந்த மை நிலவில் களங்கம் போல் இருந்தது என்று தலைவன் பாராட்டுகிறான்.

இது குறுந்தொகையில் புதுமணப்பெண் தன் கணவனுக்காகக் துன்பப்பட்டு உணவு தயாரிப்பதைப் போன்று காதாவில் வரும் பெண்ணும் தன் கணவனுக்காக அடுக்களையில் மிகவும் சிரமப் படுகிறாள் என்பதை அறிய முடிகிறது. இரண்டு இலக்கியங்களிலும் வரும் தலைவர்கள் தலைவிகளைப் பாராட்டி அவள் சமைத்த உணவை சுவையாக இருப்பதாகக் கூறி உண்கின்றனர். இதன் மூலம் கணவனுக்குப்

வேறுபாடு எதுவும் நிலவியதாகத் தெரியவில்லை.

பரத்தையர் பிரிவு மேற்கொண்டு திரும்பிய தலைவனிடம், தலைவி தன் நிலையைக் கூறும் பொழுது மறுபிறப்பு பற்றி குறிப்பிடுகின்றாள்.

**"அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
***மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!***
**இம்மை மாறி மறுமை ஆயினும்,**
**நீ ஆகியர் எம் தலைவன்,**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே" (குறுந்.49)**

இப்பிறப்புமாறி, மறுபிறப்பு வருவதாயினும், நீ என் கணவனாக வேண்டும் என்றும், உன் மனம் ஒத்தவள் நான் ஆக வேண்டும் என்று தலைவி குறிப்பிடுகின்றாள். இதிலிருந்து தலைவன் தலைவியரின் அன்புடைமை பிறவி தோறும் தொடரும் என்பதும் இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கையும் சங்ககால மக்களிடம் நிலவியதை இப்பாடல் அழுத்த மாகப் பதிவு செய்கின்றது.

தலைவன் மீது ஊடல் கொண்ட தலைவி, மறுபிறப்பில் தலைவனோடு வாழும் வாழ்க்கை வேண்டாம் என்று முடிவெடுக்கின்றாள்.

**"நின்நினை வுடனே நேரும் சாவின்**
**மீண்டும் நினையே மேவுதல் பெறுமென**
**சினமிகு புலவி மனத்துடன் அமைந்த**
**இன்றே யானே இறக்க விலையே" (காதா.475)**

தலைவன் மீது ஏற்பட்ட கோபத்தால் தலைவி இறக்க நினைக்கின்றாள், ஆனால் இறக்கவில்லை. காரணம் சினம் மிகுதியால் தலைவனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால் இறக்கும் போதும் அவன் சிந்தனையுடனே இறக்க நேரிடும். ஒருவர் இறக்கும் போது எதை நினைத்துக் கொண்டு இறக்கின்றார்களோ அதுவாகவே அடைவர் என்பது நமது மரபினர் ஐதீகம். ஆகையால் அப்படி இறந்தால் அவனையே அடைய நேரிடும். இப்பிறவியில் செய்த கொடுமை போதாது என்று அடுத்த பிறவியிலுமா அவன் கொடுமையை அனுபவிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு நான் இறக்கவில்லை என்று தலைவி தலைவனை கண்டிக்கிறாள். இதிலிருந்து இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கை காதா சப்தசதி மக்களிடம் நிலவியதை அறியமுடிகின்றது. இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கை சங்க இலக்கிய மக்களிடம் நிலவியது போன்றே காதா சப்தசதி மக்களிடமும் நிலவியது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியத்.தலைவி இம்மையில் மட்டுமல்லாமல் மறுமையிலும் தலைவனோடு சேர்ந்து வாழ நினைக்கின்றாள். ஆனால் காதா சப்த சதி தலைவி இம்மையில் தலைவனோடு படுகின்ற பாடே போதும், மறுமை யிலும் துன்பத்தை அனுபவிக்க முடியாது என்று கூறி தன் உணர்வை

தெரியப்படுத்தினால் அந்தக் குடும்பமே சீர்குலைந்துவிடும் என்ற எண்ணத்தில் தன் மனத்திற்குள்ளேயே அடக்கிக்கொள்ளும் பெண்களின் மன அடக்கத்திற்கு இக்கவிதை மிகச்சிறந்த உதாரணம்.

தலைவி புகுந்த வீட்டில் கொழுந்தனின் தவறான பார்வைக்கு ஆளாகின்றாள். அந்நிலையில் மிகச் சிறந்த மதி நுட்பத்துடன் செயல்படுகின்றாள்.

**"கோதூறு மனமுடைக் கொழுந்தனை நோக்கி**
**மாதவள் தினமும் போதனை செய்தாள்**
**இராம னுடன் செல்லும் இலக்குவன் சரிதம்**
**சுவரில் வரைந்த சுடரோ வியத்தே !"** **(காதா.1:3335)**

புதுமணப் பெண்ணாகிய தலைவி புகுந்த இடத்தில் கொழுந்தன் ஒரு விதமான பார்வையில் தன்னைப் பார்ப்பதைத் தவிர்க்க விரும்பினாள். வெளிப்படையாகச் சொன்னால் குடும்ப உறவுகள் பாதிக்கப்படும் என்றும் அஞ்சினாள். ஆகையால் தன் வீட்டுச் சுவரில் வரையச் செய்த இராம லக்குவணர்கள் சீதையுடன் காட்டுக்குச் செல்லும் ஓவியத்தைச் சுட்டிக் காட்டி அந்தக் கதையைக் கூறுகின்றாள். இலக்குமன் போல நீயும் அண்ணியைத் தாயாக மதிக்க வேண்டும்- என்ற உள் நோக்கத்துடன் கொழுந்தனுக்குப் புரிய வைத்து குடும்ப பெருமையை பாதுகாக்கும் தலைவியின் மதி நுட்பம் போற்றுதலுக்குரியது.

குடும்ப பெருமையை நிலைநிறுத்த தானே போராடும் பெண்ணின் செயல் குறிப்பிடத்தக்கது. குறுந்தொகை தலைவி தன் கணவனின் தவறை வெளிக்காட்டாமல் மறைத்து தன் குடும்பப் பெருமையை பாதுகாக்கின்றாள். அதைவிட ஒருபடி மேலே சென்று காதா சப்தசதி பெண்கள் கொழுந்தன் தவறைக் கண்டித்து அவனைத் திருத்த முயல்வதோடு மட்டுமல்லாமல் அதை தன் குடும்பத்திற்கு தெரியப் படுத்தாமல் மறைக்கின்றனர். குடும்ப ஒற்றுமை சீர்குலைந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் கொழுந்தன் தவறுகளை குடும்ப பெருமை கருதி மறைக்கும் நற்சிந்தனை படைத்த பெண்களாக காணப் படுகின்றார்கள். இரு இலக்கியத் தலைவிகளும் குடும்பப் பெருமைக் காகவும், ஒற்றுமைக்காகவும் ஆண்கள் செய்கின்ற தவறைப் பொறுத்துக் கொண்டு குடும்பத்தை வழிநடத்திச்செல்லும் பெண்களாக வலம் வந்ததை அறிய முடிகின்றது.

**கற்பு நிலை தவறிய பெண்**

காதாவில் கற்பு நிலை தவறிய பெண்கள் பற்றிய பதிவுகளும் காணப்படுகின்றன. தலைவியின் தவறுக்கு உடந்தையாக செயல்படக் கூடியவளாக தோழியின் செயல்பாடுகள் காதாவில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

**"ஐய முற்ற அரிவை கேள்வன்**
**புன்னைப் பூக்கள் பொறுக்க விடானே!**
**திறனி லாளன் இரவில் தானே**
**சென்று கொணரச் செல்கின்றானே" (காதா. 259)**

தலைவி முன்னிரவில் புன்னைப் பூக்கள் பொறுக்கச் செல்கின்றாள். அங்கே காதலனொருவனுடன் கூடிக் களிக்கின்றாள். இந்தச் செயல் தலைவனுக்கு சில நாளில் ஐயத்தை ஏற்படுத்துகின்றது; அதனால் தலைவன் தலைவியை வீட்டில் வைத்துவிட்டு புன்னைப் பூக்கள் பொறுக்கச் செல்கின்றான். தலைவியைக் காணாத தலைவன் தலைவியை வீட்டிற்கே தேடி வந்து தலைவியின் தோழியிடம் கேட்கின்றான். அதற்குத் தோழி திறனில்லாத தலைவன் தலைவியை புன்னைப் பூக்கள் பொறுக்கவிடாமல் தானே புன்னைப் பூக்கள் பொறுக்கிவரச் செல்கின்றான் என்று தோழி, தலைவியின் காதலனிடம் கூறுகின்றாள். இதில் தலைவியின் தவறான நடத்தைப் பற்றிய பதிவுகள் காணப்படுவது அக்காலச் சமூகத்தின் பிரதிபலிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவன் வந்தவுடன் தன் தவறை மறைக்கும் தலைவியின் செயலை கண்டோர் பின்வருமாறு கூறுகின்றனர்.

**இல்லத் தலைவன் எதிர்வந் திடவும்**
**காப்பில் மடந்தை "காப்பா யாக!**
**சரண்என வந்தோர்க் கரண்நீ" யென்றே**
**கணவ னிடமே கடிதொப் படைத்தாள் (காதா.3.97)**

கற்பில்லாத தலைவியின் வீட்டிற்குத் தவறான எண்ணத்துடன் ஒருவன் வந்திருக்கின்றான். அப்பொழுது எதிர்பாராதவிதமாக தலைவன் வந்து விடுகின்றான், உடனே தலைவி தலைவனிடம் இவன் தங்களிடம் சரணடைய வந்தவன், அதனால் அவனைக் காக்க வேண்டும் என்றும், தன் தாய் வழி உறவினன் என்றும் கூறி தன் கணவனிடம் சரண்புக வைத்துவிடுகின்றாள். கற்புக் காப்பில்லாத பெண்ணின் சூழ்ச்சித் திறனை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.. தலைவன் இருக்கும் போதே வேறொரு ஆடவனை நாடும் பெண்களும் இருந்தார்கள் என்ற சமூக எதார்த்த நிலை குறிப்பிடுகின்றது.

**தலைவன் விரும்பிய பெண்ணை அழைத்து வரும் தலைவி**

தன் கணவன் மற்றொரு பெண்ணை விரும்புகின்றான் என்ற காரணத்திற்காக அப்பெண்ணை அழைத்து வரும் தலைவியை காதாவில் காண முடிகின்றது. தலைவன் மற்றொரு பெண்ணை விரும்புகின்றான் என்பதற்காக தலைவி அந்த அழகிய பெண்ணை அழைத்து வருவதற் காக அப்பெண்ணின் இல்லத்திற்கு செல்கின்றாள். அந்த அழகிய பெண்ணின் தோழி தலைவியின் செயலை பாராட்டுகின்றாள்.

**"மடந்தை யுன்பால் மையல் கொண்டே**
**எத்துனை விரகத் தேங்குகின்றானோ?**
**பொறாமை மிக்கும் பொறுமை யுடனனே**
**அவனது மனைவி அழைத்திட வந்தாள்!"** **(காதா. 184)**

அவள் பேரழகி! அவளிடம் மையல் கொண்ட தலைவனோ விரக தாபத்தில் நொந்தான். அவனது மனைவியும் அழகி தான். எனினும் மனித உள்ளம் எத்துணை விசித்திரமானது? தன் தலைவனின் விரக தாபத்தைத் தணிக்க அத்தலைவி தியாக உள்ளத்துடன் மனதில் பொறாமைத் தீ கனன்றெறிந்தாலும் கூட தானே வந்து அழைக்கிறாள். அப்பேரழகியின் தோழி அவ்வில்லத்தரசியின் உள்ளத்தை வியந்து பாராட்டிப் பேசும் கவிதையாக, இக்கவிதை அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எந்தப் பெண்ணும் விட்டுக் கொடுக்காத ஒன்றை இத்தலைவி விட்டுக் கொடுக்கின்றாள் என்பதோடு மட்டுமல்லாமல் அன்று முதல் இன்று வரை பெண்கள் சமூகக் கட்டுப்பாடு என்னும் வரையரைக்குட் படுத்தப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதை இக்கவிதை எடுத்துரைக்கின்றது. தலைவியிருக்கும் போதே மற்றொரு பெண்ணை நினைத்து வருந்தி அந்தப் பெண்ணை அழைத்து வரும் செயலை தலைவியே உடன்பட்டு செய்யுமாறு ஒரு கட்டமைப்பை அக்காலச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**உடன்போக்கிற்குப் பிறகு வருந்தும் தலைவி**

தலைவனை நம்பி உடன் போக்காக வந்த தலைவி வந்த பிறகு வருந்தும் நிலை காதாவில் காணப்படுகிறது.

**"நாணம் விட்டு நடத்தை கெட்டே**
**உலகில் இகழை யுற்றுமில் விதமாய்**
**யாருக்காக ஆனே வைணே**
**இன்றே பிறன்போ லிருக்கின் றானே" (காதா.624)**

தலைவி தலைவனை நம்பி தன் பெற்றோர் உற்றோரை மதியாமல் உடன் போக்காக வந்தாள். தனது நாணம் கற்பொழுக்கம், குலப் பெருமை யாவற்றையும் தலைவனுக்காகத் தியாகம் செய்தாள். அதை மதியாமல் தலைவன் இன்று பிறன் போல அன்பின்றியிருக்கின்றானே எனத் தலைவி வருந்துகின்றாள்.

உடன்போக்கிற்குப் பிறகு வருந்தும் நிலை சங்க இலக்கியங்களில் இல்லை. ஆனால் காதாவில் உடன்போக்கிற்குப் பிறகு ஒரு பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு அமையும் என்ற உண்மை எடுத்துரைக்கப் படுகின்றது.

**பல மனைவியருடன் வாழும் தலைவனை விரும்பும் தலைவி**

பல பெண்களை மணந்த தலைவனுடன் தானும் ஒரு தலைவியாக வாழும் பெண்ணின் மனநிலை,

**"கண்ணோட் டத்தால் கலந்த போதே**
**இத்துணை இன்பமெம் இதயத் துறுமேல்**
**வஞ்சமின்றி மனமிசைந் தேகும்**
**அவர்தம் இன்பம் அளவிடற் காமோ?" (காதா.1.85)**

பல மனைவியருடைய தலைவன் அவன். அனைவரையும் திருப்திப்படுத்தும் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்பவன். அவனை நோக்கி ஒரு தலைவி கூறியது. "நீ என்னிடம் ஏதோ தாஷியண்யத்திற்காக வருகின்ற போதே இத் துணைப் பேரின்பம் அளிக்குமேல் வஞ்சகமின்றி மனமொப்பிச் செல்லும் போது அப்பெண்கள் பெறும் இன்பம் அளவிடற் கியலுமோ?" என்று கூறுகின்றாள். 'உன் மனமிசைந்த காதல் எனக்குக் கிட்டுமா?' என்று வேண்டுவதாகக் குறிப்பால் உணர்த்துகின்றாள்.

பல மனைவியருடைய தலைமகனின் அருள் பெற்ற தலைவியின் தோழி

**"இரவில் கொழுநனால் இவள் இதழ்ச் செம்மை**
**மறையக் காலையில் மகளிர்கள் கண்டே**
**கண்களிற் கொண்டனர் கலைந்தஅந் நிறமே!" (காதா.26)**

இரவில் கலந்துறைந்த தலைவியின் இதழ் செம்மை இழந்தது. அந்தச் செந்நிறம் எங்கோ போய் விட வில்லையாம்! மறுநாள் காலையில் தலைவியைக் கண்ட பிற மனைவியர் பொறாமையால் கண்கள் சிவந்தனர். இதழ் இழந்த செம்மை இவர்கள் கண்களில் தான் இருக்கிறது என்று கூறுகின்றாள். தலைவனின் அன்பு கிடைத்தாலே போதும் அதை விட உலகில் வேற எதுவும் இல்லை என்ற நிலையில் பெண்கள் வாழ்ந்ததை காதா பதிவு செய்கின்றது.

பரத்தை பிரிவு மட்டுமே குறுந்தொகையில் குறிப்பிடப்படுகின்றது. பல பெண்களை மணந்த தலைவன் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் காதா சப்த சதியில் பல பெண்களை மணந்த தலைவன் பற்றிய குறிப்பு கள் பல காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் குறுந்தொகையில் பலதார மணம் இல்லையென்றாலும் ஐங்குறுநூறு, அகநானூறு போன்ற அக இலக்கியங்களில் பலதார மணம் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

**பிரசவ வேதனையில் எறிந்து விழும் தலைவி**

ஒரு பெண்ணிற்கு மறுபிறப்பு என்று பிரசவத்தை குறிப்பிடுவார்கள். அந்த மறுபிறப்பு வேதனையை அனுபவிக்கும் தலைவியின் செயலை தோழி பின்வருமாறு குறிப்பிடுகின்றாள்.

**"முதற்பிர சவத்தில் நோவுக் காற்றா**
**தாய்தொடி யரிவை 'அகல்வீர்! கணவன்**
**பெயராது கூடப் பேசல் வேண்டாம்**

**என்றுரைத் திட்டே நின்றங் கிருந்த**
***நங்கைய ரெல்லாம் நகைத்திடச் செய்தாள்"* (காதா. 223)**

தலைவியின் முதல் பிள்ளை பேற்றுக்காலம் இடுப்பு வலி மிக்கது, நோவுக்காற்றாது நொந்து கொண்டாள். வந்த பெண்கள் அவள் கணவனைப் பற்றி பேசினர். இவளுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் பெயரெடுப்பதையே விரும்பேன் என்று வெறுப்புடன் கூறினாள். அது கேட்ட மற்ற மங்கையர் எல்லாரும் சிரித்தார்கள். அவர்களும் அப்படிச் சொன்னவர்கள் தானே! பிரசவ ஞானம் கொஞ்ச நேரம் மட்டும் தான்! என்று விளக்கம் தரப்படுகின்றது.

**நிறைவுரை**

தலைவிக்கான பண்புகளை வரையறுத்தல், தலைவன் பரத்தை பிரிவு மேற்கொண்டு திரும்பும் நிலையில் தலைவி தன் ஊடலை வெளிப் படுத்துதல், கணவனுக்காக தன்னை அர்ப்பணித்து அவனுடைய இன்பமே தன் இன்பம் என்று இல்லறக் கடமையாற்றும் தலைவி, குடும்பப் பெருமையை பாதுகாக்க தன்னையே மெழுகாக உருக்கிக்கொள்ளும் தலைவி என்று குறுந்தொகைத் தலைவிக்கும் காதா சப்த சதி தலைவிக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை.

கற்பு காப்பில்லாமல் மற்றொரு ஆடவனை விரும்பும் தலைவி, தலைவன் வேறொரு பெண்ணை விரும்புகின்றான் என்பதற்காக அப் பெண்ணை அழைத்து வந்து தியாகம் என்ற பெயரில் கொடுமையை அனுபவிக்கும் தலைவி உடன் போக்காகச் சென்ற பிறகு தலைவனின் அன்பு கிடைக்கப் பெறாமல் தன் நிலையை எண்ணி வருந்தும் தலைவி, பல பெண்களுடன் தானும் ஒருத்தியாக வாழும் தலைவியின் மன வருத்தம், பிரசவ வேதனையில் ஒரு பெண் எவ்வாறு நடந்து கொள்வாள் என்ற எதார்த்தம், போன்ற நிகழ்வுகள் காதா சப்த சதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் குறுந்தொகையில் இத்தகைய பதிவுகள் காணப்படவில்லை. தலைவியின் பண்பு நலன் என்று எடுத்துக் கொண்டால் இரண்டு இலக்கியங்களிலும் பெரும்பான்மைக் கூறுகள் ஒன்றாகக் காணப்படுவது தெளிவு. அவற்றிற்கிடையே சிறிய வேறுபாடுகளும் உண்டு என்பது மறுப்பதற்கில்லை.

# இலக்கியம் காட்டும் நீர்வளம்

புலவர் சி.பாண்டுரங்கன், ஆம்பூர்

**"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு" (20)**

என்பது திருக்குறள். வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில், வான்புகழ் கொண்ட வள்ளுவனார், நீர் மற்றும் மழையின் முக்கியத்துவத்தை, ஏழுசீர் கொண்ட இக்குறள் வெண்பாவில் எழில் சித்திரமாக்கினார். உலகை, மண், நீர், தீ, வளி, வான் என்பவற்றின் கூட்டணியாக நம் முன்னோர் கண்டு வந்தனர்.

நிலத்திற்கு எல்லையாகக் கடல்நீர் அமைந்த உண்மையினைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் அறிந்திருந்தனர். தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரம், 'வடவேங்கடந் தென்குமரி...' எனத் தொடங்கி, '...பல்புகழ் நிறுத்த படிமையோனே!' என நிறைவுபெறுமாறு, பனம்பாரனாரால் பாடப்பட்டுள்ளது. இதில், '...மல்குநீர் வரைப்பின்...' என்னும் தொடரின் பொருளாக, இளம்பூரணர், 'மிக்க நீரையுடைய கடலாகிய எல்லையை உடைய உலகின்கண்ணே' எனக்கூறியது ஈண்டு நினையத்தகும். இப்பாடலின் விளக்கவுரையில், அவர் எழுதிய குறிப்பின் ஒரு பகுதி:

"(எல்லையாக) இம்மலையும் ஆறும் கூறியது, அவை தீர்த்தமாகலானும், கேடில வாதலானும், எல்லாரானும் அறியப்படுதலானு மென்பது."

கடல், மழை, அருவி, சுனை, ஆறு, ஏரி, குளம், கேணி, அணை முதலாக எந்த வடிவில் நீர் இருப்பினும், அது நம் சிந்தையைக் கவர்வதே!

இலக்கியங்களின் வழியே, 'நீர்வளம்' என்னும் கருத்தைத் தேடுகிற முயற்சியே, இக்கட்டுரையின் ஆக்கமாகும். அடிப்படை நீர்வளம் மழையே!

**தொல் விளக்கம்:**

தொல்காப்பியம், பொருள் அதிகாரம், அகத்திணை இயல், பா 20 வருமாறு:

"தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ, அவ்வகை பிறவும் கருஎன மொழிப."

அவ்வகை பிறவும் என்றதனால், (பூ) நீர்நிலை முதலானவற்றைச் சான்றோர் கொண்டனர். எடுத்துக்காட்டாக, இளம்பூரணர் குறித்தவை:

1. (கான்) யாறு
2. சுனை
3. அருவி
4. கூவல்
5. பொய்கை
6. கேணி
7. கடல்

இவை அனைத்திலும், கடலே முதன்மை பெறினும், நன்னீர் நிலைவகை அனைத்துக்கும் கார் மழை தருவதால், திருவள்ளுவர், அதிகாரம் 2 வைத்தார் இப்படி: "வான் சிறப்பு"

தமிழறிஞர், நெய்தல் உவர்க்கழியை நீர்நிலையாய்ச் சுட்டினர். புதியன புகுதலும் வழுவல அன்றோ?... பிற்காலத்துப் புதிய ஆக்கங்களாகத் தோன்றிய நீர்நிலைகள், வரலாறு, சிந்தனைக்கு விருந்தன்றோ? பாராட்டி மகிழ்வோம்!

**அருவிச்சிறப்பு**

குழந்தைகள் முதல், முதியோர் வரை, அருவி கண்டும், அருவியில் நீராடியும் குதூகலிப்பதை நேரடியாக அவர்களின் மகிழ்வுரை வழி அறிகின்றோம்.

காவிரி குளிர்நுண்துளி மேகமெழக் கொட்டிக் குதித்துக் களித்துப் பொங்கிப் பெருகிப் புரளும் ஒகேனகல் நீர்வீழ்ச்சி, கோவை குற்றாலம், ஆழியாறு சார்ந்துள்ள குரங்கருவி, புகழ்மலை பூண்ட முத்தாரமெனக் கொட்டும் வெள்ளியருவி, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும் திற்பரப்பு அருவி, நிரல்வகுத்து அருவித்தொகுப்பின் இலக்கணமாய் ஈர்க்கின்ற, ஆணி முற்சாரலையும் ஆடி அடைசாரலையும் தோழியராய்க் கைகுலுக்கி வெண்முத்தை வென்ற புன்னகை காட்டும் திருக்குற்றாலப் பேரருவி, ஐந்தருவி, செண்பக அடவி அருவித் தொகுப்பு முதலாகப் பெரிய அருவிகளும், மாவட்டந்தோறும் கார் காலத்தில் களி நடனமிட்டு மகிழ்விக்கும் நூற்றுக்கணக்கான சிற்றருவிகளும், மக்களை மகிழ்விப்பன. பெயரிடப்படாத குழவிகளைப் போலக் குறிஞ்சித்தாய் மடியில் கொஞ்சிப்புரள்வன!

**நற்றிணை காட்டும் அருவி:**

மலைச் சாரலில், அருவிகள் ஒலித்தபடி இருக்கும். (இந்த அருவிகளின் நீர்வளம் காரணமாக) மூங்கில்கள், செங்காந்தள், வாழை மரங்கள் மிகுந்திருக்கும்.

**அருவி யார்க்கும் பெருவரை அடுக்கத்துக்**
**குருதி ஒப்பின் கமழ்பூங் காந்தள்**
**வரியணிச் சிறகின் வண்டுண மலரும்**
**வாழைஅம் சிலம்பில்... நற்.399**

*நற்.151*, அருவியில் களிறு பகைவெல் கோடு கழுவுதல் கூறும்!

**அருவிகளின் பெருமைகாட்டும் குறுந்தொகை:**

இரவிலே மனிதர் அறியாதபடி, அடர்ந்த காடுகளிலே மழை பெய்தாலும், காலையில் விழும் அருவிநீரின் ஒலி மிகுதியாலே, அது மக்களால் அறியப்படும்.

**. . . . . யாமத்துக்**
**கருவி மாமழை வீழ்ந்தென, அருவி**
**விடகரத்து இயம்பும் நாட! குறு.42**

புவி ஈர்ப்பின் 'விளைவை' அறிவியல் விளக்கும் முன்னரே, இலக்கியம் காட்டும் அருவி விளக்கிவிட்டது! அருவி, மலைஉச்சியில் தோன்றினும், அங்கு நில்லாது, கூத்தர் முழவு நிகர் ஒலித்துப் பக்க மலையில் தாழ்ந்து வீழும்:

**பெருவரை மிசையது நெடுவெள் ளருவி**
**முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி,**
**சிலம்பின் இழிதரும்... குறு.78**

மலையருவியில், பகலிலே நீர் விளையாட்டயர்தல், இனிமை தருவதாகும்.

**ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்**
**கோடுயர் நெடுவரைக் கவாஅன், பகலே**
**பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே... குறு.353**

நெடுநேர நீர்விளையாட்டால், கண் சிவத்தல்:

**நீர்நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்... குறு.354**

அருவி, முழவின் இசை காட்டுதல்:

**...துன்அரு நெடுவரைத் ததும்பிய அருவி**
**தண்ணென் முழவின் இமிழ்இசை காட்டும் குறு.365**

பெருமழையால் தோன்றிய அருவியில், மகளிர் விரும்பி நீராடும் பொருட்டுக் கூட்டமாகச் சென்றனர்:

**... தொய்யல் மாமழை தொடங்கலின், அவர் நாட்டுப்**
**பூசல் ஆயம் புகன்று இழி அருவி.... குறு.367**

(ஐங்குறுநூறு காட்டும் நீராடலை, 'ஆற்றுப் புனல் விளையாட்டு' என்னும் தலைப்பில், பின்னர் காண்போம்.)

**பதிற்றுப்பத்தில் பதிந்த அருவி:**

கவரிமான்கள், பகலில் மேய்ந்து மகிழ்ந்த நறுமணம் கமழும் நரந்தம் புல்லையும், அப்புல் செழித்துவளரக் காரணமான அருவிகளையும், தம் கனவிலும் கண்டு மகிழ்ந்தன! எப்போது எனில், அவை, முருக்க மரங்கள் அடர்ந்து செழித்துள்ள மலையில் இரவில் உறங்கும்போது! பா11 வரிகள்:

**.... கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி**

**பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்...**

பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதமனார் பாடிய மூன்றாம்பத்து, 'தேரில் கட்டிய துகில் கொடிக்குப் பெருமலையினின்று இழியும் அருவியை உவமம் காட்டுகிறது:

**"..... பெருமலை**

**வரைஇழி அருவியின் ஒளிறு கொடி நுடங்க..." - பதிற்றுப்பத்து 25**

**பரிபாடல் காட்டும் பனிநீர் அருவி:**

தொல்காப்பியர், அகத்திணையை விளக்கும் நிரலில் கூறியுள்ளார். மேலும்

***"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்***

**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**

**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**

**உரியது ஆகும்' என்மனார்புலவர்"**

**- தொல்.பொருள்.அகத்திணை, 56**

அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுளை வரையறுத்து உணர்த்துதல், பிற பாவகை, புறப்பொருட்கும் உரியவாகும் நுட்பம் ஆகியவற்றைத் தம் உரையில் இளம்பூரணர் முன்வைத்தார்.

பரிபாடல் 6, வையை, வரி 52 – 53:

**... வரைஅழி வால்அருவி வாதாலாட்ட**

**கரைஅழி வால் அருவிக்கால் பாராட்ட...**

**பொருள் இயைபு:**

எல்லை கடந்து இழிகின்ற வெண்மையான அருவி தாலாட்டவும், தடையற்றியங்கும் தூய உருவமற்ற தென்றல் பாராட்டவும்... (இரவுக் குறி நேர்வு). 'அருவி' முதலடியில் நீரருவியையும், அடுத்த அடியில் 'உருவமற்ற (காற்று)' என்னும் பொருளையும் குறித்தது.

அறிவியல் நோக்கில் அருவியைக் காட்டும்

அழகிய பரிபாடல் 7, வையை: (ப.1-4 அடிகள்) திரைஇரும் பனிப்பௌவம் செவ்விதா அறமுகந்து உரஉரும் உடன்று ஆர்ப்ப ஊர்பொறை கொள்ளாது கரைஉடைக் குளமெனக் கழன்று வான்வயிறு அழிவு வரைவரை தொடுத்த வயங்கு வெள் அருவி...

குளிர்ச்சி பொருந்திய, அலைகள் மிகுந்தமாக் கடல்நீரை, மேகங்கள் மிகுதியாக மொண்டு, இடித்து முழங்கின. நீர்மிகையால் கரைஉடைத்துச் சுழன்றோடும் குளத்துநீர்போல, மிகுதியாகவும் விரைந்தும் மேகங்கள் மலையுச்சிதோறும் பெருமழை பொழிந்ததால், வெள்ளிய அருவிகள் பல தோன்றின!

பரங்குன்றம் என்னும் திருப்பரங்குன்றத் தருவியின் சிறப்பைப் பரிபாடல் 17, செவ்வேள், அடி 14 மற்றும் 40 கூறும் அழகே அழகு:

...ஒருதிறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப,....

கீழோர் வயல்பரக்கும், வார்வெள் அருவி ஆனாது அரோ...

கார்கால அருவி, மலர்களைச் சொரியும். அம்மலர்கள், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நான்கு வகையின:

"*பரிபாடல் 20, வையை, அடி 98-103*

**"... கொடிஇயலார் கைபோல் குவிந்த முகை,**
**அரவு உடன்றவைபோல் விரிந்த குலை,**
**குடை விரிந்தவை போலக் கோலும் மலர்,**
**சுனை கழிந்து தூங்குவன நீரின் மலர்,**
**சினை விரிந்து உதிர்ந்த வீ, புதல்விரி போதொடும்,**
**அருவி சொரிந்த திரையின் துரந்து..."**

கலித்தொகை காட்டும் கவின் அருவி:

... இலங்கும் அருவித்தே, இலங்கும் அருவித்தே,
வானின் இலங்கும் அருவித்தே... (மலை) - கலி.41

**அருவி, குடிநீர்ஆதல்; தாலாட்டும் ஆதல்:**

அடர்சோலை கவிந்தது, மலைநாடு. காரணம், குறைவற்ற மழைவளம். அதனால், பொங்கிப்பெருகும் நீர்வளம் அருவியாகக் கொட்டுகின்றது. அப்பகுதியில் மறப்புலியின் பகைகெடுத்த முறச்செவி கொள் யானை, தழைஉணவை வயிறார உண்டு, அருவியின் நீரைக் குடித்து, தாலாட்டுதல் போன்ற அருவி ஒலியால் நிம்மதியாக உறங்கியது. அருவியின் பயன், நீராடும் ஒன்றுடன் மட்டுமே நிற்காமல், பயன்கள் பல கிளை விரிக்கும் தகைமையை எழுத்தோவியத்தில் படம்பிடித்துக்

காட்டுகிறது கலித்தொகை 42:

**"மறம்கொள் இரும்புலித் தொன்முரண் தொலைத்த**
**முறஞ்செவி வாரணம் முன்குளகு அருந்திக்**
**கறங்குவெள் அருவி ஒலி(யி)ன் துஞ்சும்**
**பிறங்கு இருஞ்சோலை நன்மலை (நாடன்)..."**

**இனிய உவமை, இரட்டை அருவி:**

இரண்டு பக்கமும் நெடிதுயர்ந்த மலைகளின் உச்சியில் தொடங்கி, மிகுந்த நீர்வளம் சிறந்த இரண்டு அருவிகளாக வீழ்கின்றன. அந்நீர் வேங்கை மரம் ஒன்றில்மேல், தொடர்ந்து வீழும் காட்சி, அமர்ந்த நிலை திருமகளின் இருபுறமும் யானைகள் மலரும் நீரும் சொரியும் காட்சியை நினைவூட்டுகின்றது. அருவிநீர் வீழும் வேங்கைமரத்தின் அடிப்பகுதி முழவு போன்றுள்ளது; நெருப்பெனச் சிவந்த மலர்கள் அதில் பூத்துக் குலுங்குகின்றன. அருவி நீரால், தாமரை மலர்கள் செழித்து மலர்ந்துள்ளன. திரும்பும் திசையெல்லாம், திருமகள் விழைந்து வாழும் வளமான இடமாகக் காட்சிதரும். மலைநாட்டின் அருவிகளின் சிறப்பை இதனால் அறியலாம்.

**"கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்**
**எதிர்எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து**
**அதிர்இசை அருவி தன்அம் சினைமிசைவீழ,**
**முதிர் இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை,**
**வரிநுதல் எழில் வேழம் பூநீர் மேல்சொரிதர,**
**புரிநெகிழ் தாமரை மலர்அம் கண் வீறுஎய்தி,**
**திருநயந்து இருந்தன்ன தேம்கமழ் விறல் வெற்ப!" -கலி.44, 1-7**

**பஞ்சத்தை வென்ற அருவி:**

வெற்றியையுடைய வெற்பனின் நாடுஅது! பக்க மலைகள் ஏராளம்! சுரபுன்னை மரங்கள் பசுமை மாறாமலும் அடர்ந்தும் வளம் நிறை பூமி! அனைத்து மடுக்களும் நீரால் நிரம்பித் ததும்புகின்றன. அகன்ற பாறையில், களிறு, தான் விரும்பும் பிடியுடன் வாழ்கிறது. அக்களிறு பகைக்களிற்றின் நெற்றியில் குத்தி அதனைத் துரத்தியதால், கொம்பு குருதியால் சிவந்துள்ள காட்சிபோல, சிவந்த நிறத்தில் நாள்தோறும் பூக்கும் காந்தள் மலர்கள் புதுமையை உண்டாக்குகின்றன. இயற்கை அழகு கொஞ்சம் இவ்வளமைக்குக் காரணம் யாது? பஞ்சத்தை வென்று கொழிக்கும் நீர்வளத்தின் ஊற்றுக்கண் குளிர்ந்தும் தொடர்ந்தும் பயன்மிகு மழைபொழிவதும், அம்மழை வெள்ளம் ஓயாமல் அருவியாக ஒலித்து இழிவதுமே அடிப்படை:

**"வறன் உறல் அறியாத வழைஅமை நறுஞ்சாரல்**
**விறல் மலை வியல் அறை, வீழ்பிடி உழையதா,**
**மறம் மிகு வேழம், தன் மாறுகொள் மைந்தினான்,**
**புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல,**
**உயர்முகை நறுங்காந்தள் நாள்தோறும் புதிதுஈன,**
**அயம்நந்தி அணிபெற, அருவி ஆர்த்து இழிதரும்**
**பயமழை தலைஇய பாடுசால் விறல் வெற்ப!..." -கலி.53, 1-7**

"மணிவரை மருங்கின் அருவி போல..." என்னும் அடி கலி. 103 இசைப்பாவில் அமைந்து அணிசெய்தது.

ஓயாமல் ஒலித்து வீழ்கின்ற அருவிகளை இமயமலை கொண்டு விளங்குதலை, ஆவணப்படுத்துகிறது கலிப்பா.105, அடி 73-75:

**". . . மன்னி**
**அமைவரல் அருவி ஆர்க்கும்**
**இமையத்து. . ."**

**அகநானூறு காட்டும் அழகிய அருவிகள்:**

அருவிக்கரையினருகில், கூப்பிடு தூரத்தில், மக்கள் வசிக்கும் ஊர் இருந்தது. தலைவனுக்குக் கூற மறந்த செய்தியாகக் குறிக்கப்படும் கருத்தால் இதனை அறியலாம்:

**". . .அயவெள் அருவி சூடிய உயர்வரைக்**
**கூஉம் கணஃது எம்ஊர்..." - அகம் 38, 15-17**

வீட்டுத் தோட்டத்தின் குளிர்ச்சியான பள்ளத்திலே அடர்ந்த கூதளஞ் செடியின் தழைகள்மேல், அவை குழையுமாறு, இனிய இசையுடன் அருவி வீழும்:

**"அன்னாய்! வாழி, வேண்டுஅன்னை! நம் படப்பைத்**
**தண்அயத்து அமன்ற கூதளம் குழைய,**
**இன்இசை அருவிப் பாடும்..." அக.68;1-3.**

குளிர்அருவிபல, சுனையை நிரப்புதல்:

**...ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்**
**தண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை... - அக.92, 9-10**

கொடைவள்ளலின் சமையல் கட்டொலிபோல், ஆரவாரம் செய்யும் அருவிகள்:

பல்லான் குன்றத்துக் குழூமூர் வள்ளல், நடுவுநிலை பிறழாத நன்னெஞ்சன் உதியன். அவருடைய சமையல்கட்டின் ஆரவாரம்போல

ஒலிக்கின்ற, பெரிய அருவிகள், உயரமான மலையிலிருந்து வீழும் (நீர்க்கொடை நல்கும்).

**. . .கொடைக் கடன் ஏன்ற கோடா நெஞ்சின்**

**உதியன் அட்டில்போல ஒலி எழுந்து**

**அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின்... - அக.168, 6-8**

வேங்கடமலையின் வெள்ளருவி:

போர்த்தொழில் பயின்ற யானைகளையுடையவர் மற்றும் வலிய போர்ஆற்றல் வாய்ந்த மன்னர், தொண்டையர். அவர்க்கு உரியது, வேங்கடமலை! இது, பல சிறப்புகளை உடையதாகும்.

1. மேகக்கூட்டங்கள் தவழும் முகடுகளை உடையது.
2. ஏறுவதற்கு அரிய உச்சிகளை உடையது.
3. மழைவளம் மிகுதியால், உச்சியிலிருந்து

இழியும் உயர்ந்த வெள்ளருவிகளை உடையது. வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர் இனமழை தவழும் ஏற்றுஅரு நெடுங்கோட்டு ஓங்கு வெள்அருவி வேங்கடத்து... -அகம் 213, 1-3

தலைவன் தலைவி அருவியாடி மகிழ்தல்:

**"... நல்வரை நாடனொடு அருவி ஆடியும்,**

**பல்இதழ் நீலம் படுசுனைக் குற்றும்**

**நறுவீ வேங்கை இனவண்டு ஆர்க்கும்**

**வெறிகமழ் சோலை நயந்து விளையாடலும்**

**அரிய போலும் - காதல்அம்தோழி!..." - கலி.302, 4-8**

ஆலங்கட்டி மழையால் அருவி பொங்குதல்:

இரவுநேரம், மலையில் புலியோடு போரிட்ட களிறு வென்றது. அவ்வெற்றிக்கு விலையாகத்தான் விழுப்புண் கொண்டது. அவ்விழுப்புண் நீண்டும் குழிந்தும் இருந்தநிலையில், அக்களிறு தளர்நடை நடந்தது. அச்சமயம், அப்புண்ணைக் கழுவும் வகையிலும், களிறு புத்துணர்ச்சி பெறும் வகையிலும், ஆலங்கட்டி (பனிக்கட்டி) மழையை வானம் பொழிந்தது! அந்நன்மழையால் திரண்ட வெள்ளம் பெருகி, விடியற் காலையில், மிக்க நீருடனும் வெண்ணிறத்துடனும், மலையெங்கும் பல அருவிகளாக வீழ்ந்தன. அதனால் மேலெழுந்த நீராவி, மண்கலஞ்சுடும் சூளையில் மேலெழும்புகை போலக் கவிந்தது! அத்தகைய மலை நாட்டவன் தலைவன்...

**"உழுவையொடு உழந்த உயங்குநடை ஒருத்தல்**

**நெடுவகிர் விழுப்புண் கழாஅ, கங்குல்**

**ஆலி அழிதுளி பொழிந்த வைகறை,**

**வால்வெள் அருவிப்புனல் மலிந்து ஒழுகலின்,**

**இலங்குமலை புதைய வெண்மழை கவைஇ,**

**கலம்சுடு புகையின் தோன்றும் நாட !...." - கலி.308, 1-6.**

புகழ்மிகு புல்லியின் மலையருவி:

வள்ளல் புல்லி, பொய்யா நற்புகழை உடையவன். அவனது நாட்டில், தெய்வங்கள் வாழும் மலைத் தொடர் பல உள. இடியோசைக்கு யானை எதிர்முழக்கமாகப் பிளிறும்! (மழைவளம் காரணமாக) மலையருவி வீழும். நீர்வீழ்ச்சியில் சிறிய நீர்த்திவலைகள், புகைபோல் மேலெழும். அவ்வாறு தோன்றும் மேகத்துடன், பக்கத்துப் புன்செய் நிலத்தில் அறுவடை நிறைவுற்ற பின் அடித்தாளுக்கு இட்ட தீயின் புகை சென்று இரண்டறக் கலக்கும்...

இத்தகவல்களால், மலைப்பகுதிகளிலும், புன்செய் நிலங்களிலும் வான்மழைக்குக் குறைவில்லை என நீர்வளம் உணர்த்தப்பட்டதன்றோ? அருவியின் பங்கு மிகவும் முக்கியம் என்பது தெளிவாகிறதன்றோ?

**. . . . . . . . . . . யானை,**

**சூர்புகல் அடுக்கத்து மழைமாறு முழங்கும்**

**பொய்யா நல்லிசை மாவண் புல்லி**

**கவைக்கதிர் வரகின் யாணர்ப் பைந்தாள்**

**முதைச்சுவல் மூழ்கிய கான்சுடு குரூஉப்புகை**

**அருவித் துவலையொடு மயங்கும்..." - அக.359, 10-15.**

**புறநானூறு காட்டும் பொங்கருவிக் காட்சிகள்:**

**கோடையிலும் குளிர் அருவி இழியும் மலை:**

வண்டுமொய்க்கும் குவளை மலரில், குளிர்ந்த துளி வீழுமாறு, மழை பெய்யினும் பெய்யாது நீங்கினும், கொள்ளுவிளை பூமியில் நீர்க்காலாகப் பரவிச் செல்லுமாறு, அருவி இழியும். எங்கு? நெடிய மலையுச்சி தோறும். எந்த நாட்டிலே? வேள்பாரி ஆண்ட பறம்பு மலையிலே! '... அருவி, ... மால்புஉடை நெடுவரைக் கோடுதோறும் இழிதரும்...' என்னும் அடியைப் பத்துமுறை படித்தாலும் சலிக்காது மனம்! முழு பா:

**"சேயிழை பெறுகுவை - வாள்நுதல் விறலி!**

**தடவுவாய்க் கலித்த மாஇதழ்க் குவளை**

**வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்**

**பெய்யினும் பெய்யாது ஆயினும், அருவி**

**கொள் உழு வியன்புலத் துழைகால் ஆக,**

**மால்புடை நெடுவரைக் கோடுதோறு இழிதரும்**

**நீரினும் இனிய சாயற்**

**பாரி வேள்பால் பாடினை செலினே!"** - *புறநானூறு, 105.*

**மழைநீரைச் சேமித்த, சிறிய அருவி பல நிறை மலை:**

மலை, நிரம்ப முகடுகளை உடையது; எண்ணற்ற வெள்ளருவி களை உடையது; நீர் தேக்கி வைக்கும் பள்ளங்களை உடையது. இவற்றின் ஒட்டுமொத்த பயன்யாது? மழைக்காலத்தில் சேமித்த நீர்வளம், கோடையிலும் பயனீந்து விதைகள் முளைத்து, கரும்பு போலத் தழைத்து வளரும்; மகளிர்தம் *கண்களுக்கு உவமையாகும்* குவளை உட்பட மலரினம் மலரும்; கரிய அடிமரம் கொண்ட வேங்கை நாள்தோறும் சிந்துகின்ற பொன்போன்ற பூக்கள் மிதக்குமாறு செல்லும் மணிபோன்ற (தூய) நீர், கடலில் கலக்கும்! இத்தகைய நிலவளத்தின் அடிப்படையாக விளங்கும் நீர்வளம் மிகு பகுதிதான், பெருமை மிகு நாஞ்சில் மலை நாடு:

**"... கழைக் கரும்பின் ஒலிக்குந்து**

***கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்***

**கண்ணன்ன மலர்ப்பூக்குந்து**

**கருங்கால் வேங்கை மலரின் நாளும்**

**பொன்னன்ன வீசுமந்து**

**மணியன்னநீர் கடற்படரும்**

**செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந,**

**சிறுவெள் ளருவிப் பெருங்கல் நாடனை,**

**நீவா ழியர்,நின் தந்தை**

**தாய்'வா ழியர்'நிற் பயந்திசி னோரே!** - **புற.137, 6-15**

அருவிநீர் பருகும் குளிர்நீர் ஆதல்:

மனிதனுக்கு அடிப்படைத் தேவைப் பட்டியலில், முன்னணியில் இடம்பெறும் கருத்துகள், 'தண்ணீர், உணவு, வசிப்பிடம், மருத்துவம், இவற்றையும் முந்தும் ஆடை' முதலானவை.

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**

என்னும் திருக்குறள் இப்பட்டியலில் "கல்வி" என்னும் கருத்து பெறுகின்ற முக்கியத்துவத்தை, ஒளிவிளக்கெனக் காட்டுகின்றது. பருகத்தக்க நன்னீர், உலகிலுள்ள மொத்த தண்ணீரில் முப்பத்து மூன்றில் ஒரு பங்கு தான் பயன்படுத்தும் வகையில் கிடைக்கும் வாய்ப்பு உள்ளதெனச் சிலர் கருதுவர்.

அதனாலன்றோ, வான்புகழ் வள்ளுவர், வருத்துரைத்தார் இப்படி:

**'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.'**

பாவேந்தர் வழிமொழிந்தார் இப்படி:

**. . . . . . . . . . . . . . வெப்பம்**
**முகந்த நீரே முகிலாம்;**
**குற்றமறக் கொண்டநீர்**
**கொண்டல்; அக்கொண்டலோ**
**மேற்போய் இருந்தநிலை**
**விண் வான் விசும்பென்பார்;**
**காற்றால் கருமைபெறக்**
**காராகும்; கார்தான்**
**மழைக்கும் நிலையில்**
**மழையாம்; மழைதான்**
**தழைய அமிழ்உண**
**வாவதுதான் அமிழ்து.**
**வாழ்வாருக்காக**
**விளங்கொழிக்க, அந்தநீர்**
**வீழும் நிலையில் அதை**
**மேலோர் அமிழ்தென்றார்....**

**- 'அமிழ்து எது?', பாடல்பகுதி; பாரதிதாசன்**

குளிர்ந்த குடிநீராக, அருவிநீர் பயன்படும் சிறப்பினை விவரிக்கின்றது புற.150 ஆம் பாடல்:

கண்டீரக் கோப்பெருநள்ளி, தோட்டி மலைவள்ளல். அவனைக் கண்டு வறுமை நீங்கும் வகையில் பரிசில் பெற எண்ணித் தம் சுற்றத்தாருடன் நெடுந்தொலைவு நடந்து, களைப்புடன் பலா மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார் புலவர். அப்போது அங்குவந்த நள்ளி, தாம் யார் என்பதைக் கூறாமலே, அவர்களின் பசியைப் போக்கும் உணவீந்து, அணிகலன்களைப் பரிசாகத் தந்து அனுப்பினான். அவன், வள்ளல் நள்ளி தான் எனப்பிறர் மூலம் அறிந்துகொண்டார் புலவர் வன் பரணர். இக்கொடையைப் புகழ்ந்து 28 அடி பாடலைப் பாடினார். இப்பாடலில், 2 இடங்களில் அருவிநீரின் பெருமை மிளிர்கின்றது! நள்ளியின் நாடு, மதுரைக்கு அணித்தாம்.

1. இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி,
'நன்மரன் நளிய நறுந்தண் சாரல்
கல்மிசை அருவி தண்ணெனப் பருகி'

2. இரும்பு புனைந்தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்'மலை காக்க மணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்'
நளிமலை நாடன் நள்ளியவ னெனவே.

நறுமணமும் குளுமையும் பொருந்திய மரத்தொகுப்பு நிறைந்த மலைச்சாரல் வழியாக வந்த தூயநீர், பெரிய கல் உச்சியிலிருந்து அருவியாக விழும் அழகையும், நெடிய மலையில் தோன்றிய ஊற்றின் நன்னீர் பளிங்குபோல இருந்த சிறப்பையும், இப்பாடல் படம்பிடித்துக் காட்டுகின்றதன்றோ? *தீநீர் = இனியநீர்.*

**கொண்கான நாட்டருவி:**

கடற்கரையின் ஓரமாகவே வழிநடந்து செல்பவராயினும், நீர் வேட்கையைத் தணிக்கும் நன்னீர் உள்ள இடத்தை, எதிரில் வருபவரிடம் கேட்டறிந்து, அவ்வூற்றருகே சென்று நீர் அருந்துவர்; தாகம் தணிவர்.

இந்த உலக இயல்பினை உவமையாக்கி, பேரரசர் தமக்கு அணித்தாய் இருந்தாலும், கொடைக்குணம் மிக்க ஒருவர் சிற்றரசனாயிருப்பினும், அவரைத் தேடிச் சென்று, புலவர் பரிசில் பெற்ற மகிழ்வர் என்னும் கருத்தை விளக்கினார் மோசி கீரனார்.

இப்பாடலில், 'தூய துகிலை விரித்ததுபோல, குளிர்ந்த பல அருவிகள் மலையுச்சியிலிருந்து இழியும் சிறப்புடையது கொண்பெருங்கானம்' எனச்சிறப்பித்துள்ளார்.

**"திரைபொரு முந்நீர்க் கரைந ணிச் செலினும்**
**அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்**
**சில்நீர் வினவுவர் மாந்தர் அதுபோல்**
**அரசர் உழையராகவும். . . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . அறுவைத்**
**தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்**
**தண்பல இழிதரும் அருவிநின்**
**கொண்பெருங் கானம், பாடல் எனக்கு எளிதே!"** - புற.154

ஈற்றயலடி, முன்பாடலின் முதலடியாகிய 'மழையணி குன்றத்துக் கிழவன்' என்பதனை நினைவூட்டுகின்றதன்றோ?

**வேகம் மிகுந்த அருவி:**

பறம்புமலை, பெரிய மலையாகும். அதன் அரசன் பாரி. நெடிய மலைக்கண் தோன்றும் அருவி, ஒலியை உண்டாக்கியும், வெண்ணிறத்தைக் காட்டியும். கல்லை உருட்டி ஓடும். கவிதை காட்டும் காட்சியினால், அருவியின் வேகத்தை வாசகர் யூகம் செய்யலாம்:

**. . . . . . . . . . . . . நெடுவரை**

**கறங்கு வெள்அருவி கல்அலைத்து ஒழுகும்**

**பறம்பின் கோமான் பாரி. . . . . புற.158**

**வற்கடத்தை வெல்ல, வற்றா அருவி தேவை:**

மழையின்மை/ வேனில் காரணமாக, அருவிநீர் குறைந்தால், மக்கள் அஞ்சும் பஞ்சம் காரணமாக, பால்தரும் பசுக்கள் உண்ணும் தீவனப் பற்றாக்குறை முதலாகப் பல குறைகளுண்டாகும்:

**. . . அருவி மாறி, அஞ்சுவரக் கருகி,**

**பெருவறங் கூர்ந்த வேனிற் காலை,**

**பசித்த ஆயத்துப் பயன்நிலை தருமார்... - புற.224.**

**அருவி நீரில், தவத்தோன் நீராடல்:**

இளமையில் பேரும் புகழுமாக வாழ்ந்த தலைமகன் ஒருவன், காமஞ்சான்ற கடைக்கோட் காலை, வீடுபேறு குறித்துத் தவம் மேற்கொண்டு, காட்டில் வாழ்ந்தான். மூங்கில் செழித்து வளர்ந்த மலையில் அருவியில் நீராடினான். காட்டியானை தந்த விறகில் செந்தீவேட்டு, முதுகில் பரவித்தாழ்ந்த புரிசடையை உலர்த்திக் கொண்டான்:

**. . . கழைக்கண் நெடுவரை அருவி ஆடி,**

**கான யானை தந்த விறகின்**

**கடுந்தெறல் செந்தீ வேட்டு,**

**புறம்தாழ் புரிசடை புலர்த்து வோனே! - புற. 251**

இவ்வாறு, நாள்தோறும் அருவியாடலால், தலைமுடி நிறம் மாறியது (கபிலநிறம் கொண்டது); தில்லை தளிர்போன்ற வண்ணம் கொண்டது; ஒலிக்கும் வெள்ளிய அருவி, 'கறங்கு வெள்ளருவி':

**கறங்கு வெள்அருவி ஏற்றலின் நிறம்பெயர்ந்து**

**தில்லை அன்ன புல்லென் சடையோடு.... - புற.252**

**அருவி உச்சி இமயம்:**

பட்டம் அணிந்த பிடிகள், துடிபோல் அடிகொள் கன்றுகள், களிறுகள் ஆகியவை உள்ள தொகுதியைப் பரிசாக அளிக்குமாறு

அரசனிடம் வேண்டும் புலவர், அவற்றுக்கு இமயத்தை உவமையாக்கினார்:

. . . . . . . . . பாடுஆன்று இமயம்

**எழிலி தோயும் இமிழ்இசை அருவி,**

**பொன்னுடை நெடுங்கோட்டு, இமையத்தன்ன... - புற. 369**

**வெள்ளருவி வேங்கடநாடன்:**

தொண்டை நன்னாட்டின் கரும்பனூர், இன்று கரும்பூர் என வழங்குகிறது; முன்னர் திருவேங்கடக் கோட்டத்தூர். கரும்பனூர் கிழானின் விருந்தோம்பல், இன்சொல், கொடை ஆகியவற்றைப் புகழ்ந்து நன்னாகனார் பாடிய 26 அடிபா, புற.381 ஆகும். ஒலிக்கும் அருவிநிறை வேங்கடநாட்டுக்கு உரியவன் எனப்புகழும் அடி:

. . . . . ஒலி வெள்அருவி வேங்கடநாடன், . . .

**கல்லிழி அருவி வேங்கடம்:**

கற்களினிடையே ஓடி இழியும் அருவிகளை நிரம்பப் பெற்றுத் திகழ்வது, வேங்கடம்.

**. . . கல்இழி அருவி வேங்கடம் கிழவோன். . . -புற.389**

'அருவி' முன்னடையாய், மலைப்பெயர், பெறுதல்:

**. . . . அருவிப் பாயல் கோவே! - புற.398**

தாள இசையொலி தோன்றிமலை அருவி:

. . . . . . . . ***சீர்கொள***

**இழுமென இழிதரும் அருவி,**

**வான்தோய் உயர்சிமைத் தோன்றிக் கோவே! -புறநானூறு, 399**

**அருவியின் சிறப்புகள்:**

1. பேகனுடைய மலைநாடு, அருவிகள் நிறைந்த குன்றுகளால் சூழப்பட்டுத் திகழ்ந்தது:

***கன்முழை அருவிப் பன்மலை நீந்தி. . . . .*** **புற.147**

2. பெருநள்ளி நாட்டின் மலை உயரமாக இருந்தது. உச்சியிலிருந்து இழிதரும் அருவி ஆர்ப்பரித்துக் கொட்டியது:

**கறங்குமிசை அருவிப் பிறங்குமலை நள்ளி... - புற.148**

3. வல்வில் ஓரியின் கொல்லிமலையை உடைய வன் பரணர், அருவியின் சிறப்பு விளங்கப் பாடினார். அதனைப் படிக்கும்போது, இன்றைய திருக்குற்றால மலையருவிகளைப் பற்றிய பெருமை யுணர்த்தும் 'ஆனி முற்சாரல், ஆடி அடைசாரல்' என்னும் பழமொழியும் நம் நினைவில் வந்து நிற்கும்:

## இத்திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



பரிதிமாற்கலைஞர்
(நவ.2)




மன்னர் பாஸ்கர சேதுபதி
பிறப்பு (நவ.3)

சோமலே
(நவ.4)




கி.வா.ஜகந்நாதன்
(நவ.4)



ந.பிச்சமூர்த்தி
(நவ.15)



வ.உ.சி.
(செப்.17)



மருதகாசி
(நவ.29)


பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ.சுயம்பு**

முனைவர் திரு. **இ.மறைமலை**

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

## மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும் கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ் மொழித்தேர்வு தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும்பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான தமிழ்ச்சங்கத் தேர்வுகள் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 09.01.2015ஆம் நாளன்றும், பத்தாம் வகுப்பிற்கு 23.01.2015ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
Madurai Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்,** 2/861, ராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்,** காமராஜர்சாலை, மதுரை-625 009.